# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

பெப்ரவரி 26 - மார்ச் 04, 2014 பக்கம் - 24 30/-




# கருவை விற்கும் பெண்கள்

## - திடுக்கிடும் உண்மைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரஷ்யாவின் சூச்சி நகரில் நடைபெற்றுவரும் குளிர்கால ஒலிம்பிக்கில் அனைவரது கண்களுக்கும் விருந்தளிக்கும் நிகழ்வு, பனிச்சறுக்கு நடனம் தான். மற்றைய போட்டிகளில் எல்லோரும் இழுத்துப் போர்த்திக் கொண்டு பங்கேற்கையில் இதில் மட்டும் ஆடைகுறைப்புடன் பெண்கள் பங்கேற்று பார்வையாளர்களை உற்சாகமாக இருக்க வைப்பார்கள். இந்த முறை நடைபெற்ற பனிச்சறுக்கு நடனத்தில் பதக்கங்களை வெல்லாவிட்டாலும் ஜேர்மனி மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த இந்த இரு ஜோடிகளும் பார்வையாளர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றன. அதன் காரணம் என்னவென்பது படத்தைப் பார்க்கையிலேயே உங்களுக்கு புரிந்திருக்கும்.

## என்னை வெல்வான்

"விம்பிள்டன் ரென்னிஸில் அதிக தடவைகள் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தவர் என்ற சாதனையில் என்னோடு சமநிலையில் இருக்கும் ரோஜர் பெடரர் , என்னை முந்துவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது"



என்று கூறியுள்ளார் முன்னாள் ரென்னிஸ் ஜாம்பவான் பீட் சாம்ப்ராஸ்.

ரென்னிஸ் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்த பெடரர் அண்மைக்காலமாக, இறுதிபோட்டிகளுக்கு முன்னேற முடியாமல் தடுமாறுகிறார். இந்த நிலையில் பெடரர் மீண்டும் பழைய உற்சாகத்தோடு களமாடி, அதிக விம்பிள்டன் கிண்ணங்களை வென்ற வீரர் என்ற சாதனையைப் படைப்பார் என்று பீட் சாம்ப்ராஸ் கூறியுள்ளார். தற்போது விம்பிள்டனில் பீட் சாம்ப்ராஸும், பெடரரும் தலா 7 முறை கிண்ணங்களை வென்று முதலிடத்தைப் பகிர்ந்துள்ளனர். எனினும் "பெடரரின் உடல்தகுதியையும் ஆட்டத்திறனையும் நோக்கும் போது அவர் இன்னும் 2 -4 வருடங்கள் விளையாடுவார்.இதனால் நிச்சயம் என்னைப் பின்னுக்கு தள்ளி 8க்கும் அதிக தடவைகள் விம்பிள்டன் பட்டத்தை வென்று சாதனை படைப்பார்" என்று பீட்சாம்ப்ராஸ் கூறியுள்ளார்.

## அடுத்தது எந்த அணி?

எதிர்பாராத திருப்பங்கள் கிரிக்கெட்டில் சர்வசாதாரண மாகிவிட்டது. அண்மைய அதிர்ச்சிவைத்தியம் அயர்லாந்தால் கொடுக்கப்பட்டிருக் கிறது. '20/20' கிரிக்கெட்டின் உலக சம்பியனான மேற்கிந்திய அணியை, இன்னும் டெஸ்ட் அந்தஸ்து பெறாத அயர்லாந்து வீழ்த்தியிருக்கிறது. கடந்த சில வருடங்களாகவே கிரிக்கெட்டில் முன்னேற்றத்தைக் காட்டிவரும் அயர்லாந்தை மேற்கிந்திய அணி சரிவரக் கணிக்கவில்லை. அத்தோடு உலகப்புகழ்பெற்ற கெய்ல், ப்ராவோ, சாமுவேல், சுனில் நரேன், பொலார்ட் போன்ற வர்கள் இருக்கும் திமிரில் அந்த அணி அலட்சியமாகவே விளையாடியது. 116 ஓட்டங்களை மட்டுமே அந்த அணி பெற்றுக்கொள்ள, அயர்லாந்து இலகுவாக மேற்கிந்தியாவைப் பந்தாடியது. அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதென்பது அயர்லாந்துக்கு இது முதல் முறையல்ல. 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வெல்லும் என நம்பப்பட்ட பாகிஸ்தான் அணியையே வீழ்த்தி, அந்த அணியை முதல் சுற்றிலேயே வெளியேற்றிய பெருமை அயர்லாந்துக்கு உண்டு. பெரிய அணிகளின் அலட்சியம் அயர்லாந்து போன்ற வெற்றிக்காக அர்ப்பணிப்போடு விளையாடும் அணிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது. இனி எந்த அணி அயர்லாந்திடம் சிக்கப்போகிறதோ..?

## அடித்தவனின் அடக்கம்

"நியூசிலாந்து தரப்பில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் மார்ட்டின் குரோவும், ஸ்டீபன் பிளமிங்கும் முதல் இரு இடங்களில் இருந்தனர்.

இப்போது இவர்களை நான் கடந்து தான் கொஞ்சம் தர்ம சங்கடமாக இருக்கிறது.ஏனெனில் நானொன்றும் இவர் களை விடப் பெரிய துடுப்பாட்ட வீரர் கிடையாது. அவர்களின் தி-றமையுடன் ஒப்பிடும் போது, நான் அவர்களை நெருங்க கூட முடியாது.எது எப்படியோ ஒரு வழியாக நியூசிலாந்து வீரர் ஒருவர் 300 ஓட்டங்களை எட்டியதில்லை என்ற குறையை போக்கியது மகிழ்ச்சி அளிக்கிறது.எதிர்காலத்தில் மேலும் சில நியூசிலாந்து வீரர்கள் இந்த சாதனையை படைப்பார்கள் என்று நம்புகிறேன்" இப்படிச் சொல்லியிருக்கிறார் நியூசிலாந்து அணித்தலைவர் ப்ரெண்டன் மக்கலம். இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியை நியூசிலாந்து வென்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டியில் இந்தியா வெற்றியை குறிவைத்து ஆக்ரோஷ பந்துவீச்சில் இறங்க, நியூசிலாந்து192 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஆனால் இந்தியா 400க்கும் அதிக ஓட்டங்களைக் குவித்தது. இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்திய வேகம் தொடர, நியூசிலாந்தின் முதல் 5 இலக்குகளும் 100 ஓட்டங்களைப் பெறுவதற்கிடையில் வீழ்த்தப்பட்டன. எஞ்சியிருப்பதோ 5 இலக்குகளும் 2 நாள்களும். அவற்றையும் வீழ்த்திவிட்டால் இந்தியாவுக்கு இன்னிங்ஸ்வெற்றி கிடைத்துவிடும்."இதோ! நாளை விடிந்தவுடன் வெற்றி" என இந்திய அணியும் அந்தநாட்டு ஊடகங்களும், கண்ட கனவில் மண்ணள்ளிப் போட்டு, தோல்வியின் விளிம்பில் நின்ற நியூசிலாந்தை 300 ஓட்டங்கள் அடித்து நிமிரச் செய்தார் மக்கலம்.எல்லாமே தலைகீழானது. மாபெரும் வெற்றியை அடைந்துவிடப்போகிறோம் என்றெண்ணியிருந்த இந்திய அணி கடைசியில் தன் தோல்வியைத் தவிர்க்க கடுமையாகப் போராடும் நிலையை மக்கலம் உண்டாக்கியிருந்தார். இந்த நிலையில் தான் , தன் துடுப்பாட்டத்தை எண்ணித் துள்ளிக்குதிக்காமல் பக்குவத்தோடு கருத்து வெளியிட்டு, " தான் உள்ளத்தாலும் உயர்ந்தவன்" என்பதைக் காட்டியிருக்கிறார்.




## சூதாட்டத்தில் டோனி

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பான சர்ச்சைகள் இன்னும் ஓய்ந்தபாடாகவில்லை. புதிது புதிதாக தகவல்கள் வந்தபடியேயுள்ளன. அண்மையில் திடுக்கிடும் இன்னொரு தகவலும் வெளியாகியுள்ளது. சென்னை சுப்பர்கிங்ஸ் அணித்தலைவர் மகேந்திரசிங் டோனியும் இந்தச் சூதாட்டத்தில் தொடர்புபட்டுள்ளார் என்பதே அந்தச் செய்தி.

"கடந்த 2013 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற இரவு விருந்தில் சூதாட்டதரகரான விக்ரம் அகர்வால் இன்னொரு தரகரிடம், " "ஒரு பெரிய டீல் சரிவந்துவிட்டது. நடைபெறப்போகும் ராஜஸ்தான் ரோயல்ஸ்- சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியில், சென்னை தோற்கும்" என்று சொல்லியுள்ளார்.

விருந்து முடிந்த பிறகுசென்னை அணியின் நிர்வாக முகாமையாளர் குருநாத் மெய்யப்பன், விக்ரம் அகர்வால் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஜெய்ப்பூரில் உள்ள சஞ்சீவ் என்பருடன் குருநாத் மெய்யப்பன் தொலைபேசியில் பேசியுள்ளார். "திட்டத்தின்படி 140 ஓட்டங்கள் மட்டும் எடுத்துவிட்டு, போட்டியிலும் தோற்றுவிடுவதாக டோனி சொல்லிவிட்டார். எனவே எந்தப் பிரச்சினையும் இல்லை" என்று சொல்லியுள்ளார்". இந்தத் தகவலை பொலிஸில் சரணடைந்த பந்தய தரகர் ஹரிஷ் பஜாஜ் கூறியுள்ளார்.இதனால் டோனிக்கு உண்மையாகவே சூதாட்டத்தில் சம்பந்தமுண்டா என்ற கோணத்தில் விசாரணைகள் தொடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிகளின் வாய்ப்பூட்டு

அக்கினிபுத்திரன்

ஒரு மனிதனைத் தன் கருத்துக்களை வெளியிட அனுமதிக்காமல் அதிகாரக் கரங்கள் கொண்டு தடுப்பதை வாய்ப்பூட்டு போடுதல் என்பதுண்டு.இப்போது இலங்கையில் இன்னுமொரு வகையிலான வாய்ப்பூட்டுப் போடும் முயற்சிகள் சிங்கள பௌத்த இன வெறியர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை போராட்ட வடிவமும் பெற்றுவிட்டன.

அதாவது மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதைச் சட்டப்படி தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கொழும்பில் பொது பல சேனா என்ற அமைப்பினால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இப்போது அது உண்ணாவிரதப் போராட்டமாகவும் மாறிவிட்டது.

இலங்கையில் இஸ்லாமிய மக்களும் ,கிறிஸ்தவ மக்களும் மாட்டிறைச்சி உண்பதை விலக்கி வைக்கவில்லை. ஏனைய இறைச்சி வகைகளைப் போலவே இதை உண்டுவருகின்றனர்.ஆனால் பௌத்த மதம் மாட்டிறைச்சி உண்பதைத் தடைசெய்கிறது. பௌத்த மதத்தின் கோட்பாட்டை ஏனைய மதத்தினரும் பின்பற்ற வேண்டும் என்ற மேலாதிக்க மனப்பான்மையின் வெளிப்பாடுதான் மாட்டிறைச்சிக்கு எதிரான இந்தப் போராட்டம்.

அதாவது முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் உணவுப் பழக்க வழக்கத்துக்கு வாய்ப்பூட்டுப் போட எடுக்கும் முனைப்புத் தான் இது. இந்த மஞ்சள் அங்கி மத வெறியர்களின் போராட்டத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு கோட்டைப் பகுதியே ஸ்தம்பித்தது.

முஸ்லிம் மக்களோ கிறிஸ்தவ மக்களோ பௌத்தர்களை மாட்டிறைச்சி உண்ணும்படி வலியுறுத்தவில்லை. அவர்கள் தங்கள் தேவைக்கேற்ப தாங்கள் உண்கிறார்கள்.ஆனால் அவர்கள் எதை உண்ண வேண்டும் , எதைத் தவிர்க்க வேண்டும் எனத் தீர்மானிக்க பிக்குகளுக்கு என்ன உரிமை இருக்கிறது? இதுவா இந்த நாட்டின் மதச்சுதந்திரம்?இதுவா ஜனாதிபதி கூறும் இலங்கை பெற்ற இரண்டாவது சுதந்திரம்?

இந்தியாவிலும் பல வருடங்களுக்கு முன்னர் இதேபோன்று இந்து மதத் துறவிகள் பசுவதையை எதிர்த்துப் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தினர். எனினும் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி எவ்வித தயக்கமும் காட்டவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்டார்.அத்துடன் பசுவதைப் போராட்டம் மண்ணுக்குள் போய்விட்டது. ஆனால் இலங்கையிலோ நிலைமை வேறு.

பிக்குகளின் கோரிக்கைக்குச் சாதகமான பதிலை ஜனாதிபதியின் செயலாளர் அனுப்பினார். ஆனால் பிக்குகள் அதையே கிழித்தெறிந்து விட்டு பொலிஸாரைத் தாக்கினர். எனினும் ஒரு பிக்கு மட்டும் தற்கொலை செய்ய முயன்றார் எனக் கைது செய்யப்பட்டார்.போராட்டம் தொடர்கிறது.ஏன் தடுக்கப்படவில்லை?

விலைவாசி உயர்வுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் இடம் பெற்ற அமைதிப் பேரணியை பொலிஸாரும் காடையர்களும் இணைந்து அடித்து விரட்டினர். கட்டாய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து ஊர்வலம் நடத்திய கட்டுநாயக்கா தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தொழிலாளி உயிரிழந்தார். எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக மீனவர்கள் நடத்திய போராட்டத்திலும் இதே கதிதான்.வெலிவேரிய மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் இராணுவம் மூன்று உயிர்களைக் காவு கொண்டது. இவை மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் வழங்கிய பதில்கள்.

ஆனால் மற்ற மதத்தவரின் உணவுப் பழக்க வழக்கத்தில் தலையீடு செய்ய பிக்குகளுக்கு மாத்திரம் தனிச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி பள்ளிவாசல்களை , கிறிஸ்தவ தேவாலயங்களை, இந்துக் கோவில்களை உடைக்கவும் இவர்களுக்கு சுதந்திரம் உண்டு. இந்துக் கோவிலில் இடம்பெறும் மிருக பலி பூசையைத் தடுக்கவும் அதிகாரம் உண்டு.ஆட்டைக் கடித்து மனிதனைக் கடிக்கிறார்கள். அதாவது உணவுக்கும் வாய்ப்பூட்டுப் போடப்படுகிறது.



இவை சாதாரண தனிச் சம்பவங்களல்ல. இலங்கையை முழுமையாக பௌத்த மயப்படுத்துவதற்காக ஏனைய மதங்கள் மேல் மேலாதிக்கம் செலுத்தும் இனமத வெறி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியேயாகும். இதற்கு அரச அனுசரணையும் உண்டு. வாய்க்குப் பூட்டு, வயிற்றுக்குப் பூட்டு என்னும் இத்தகைய முயற்சிகள் இன்னொரு புறத்தில் அரசுக்கும் பேரினத்துக்கும் எதிரான உணர்வுக்கு எண்ணெய் ஊற்றும் என்பதை இனவாதிகள் உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை.





மோட்டார் வாகன இயந்திரவியலில் ஆர்வமுள்ளோர்க்கு இலவச பயிற்சி நெறி



அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவிற்கு முந்துங்கள்

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2013ம் ஆண்டுக்கான சிறந்த தாபன பிரஜைக்கான விருதில் "பயிற்சி வழங்கல் மற்றும் அபிவிருத்தி" எனும் பிரிவில் அங்கீகாரம் பெற்ற DIMOவின், தாபன சமூகப் பொறுப்பு விருதினை வென்ற சிறந்ததோர் மோட்டார் வாகனப் பயிற்சிப் பாடசாலையில் கற்றுக் கொள்ளுங்கள்

"DATS"

careers@dimolanka.com

"DATS"

DIMO TECHNOLOGY

General Manager - Human Resources
DIESEL & MOTOR ENGINEERING PLC

www.facebook.com/careersDIMO




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைத் துரத்தும் போர்

ஸ்ரீவ் ஹக்கிங்




இந்தப் பிரபஞ்சம் அநாதி காலமாக இருந்துவருகிறது என்று கிரேக்கத் தத்துவவாதி அரிஸ்டேட்டில் நம்பினார். மனித இனம் மேலும் வளர்ச்சி பெற்ற நிலையில் இல்லாததற்குக் காரணம், வெள்ளங்களும் மற்ற இயற்கைப் பேரழிவுகளும்தான் என்றார் அவர். ஏனெனில், அவையெல்லாம் மனித நாகரிகத்தை மறுபடியும் மறுபடியும் ஆரம்ப நிலைக்கே கொண்டுசெல்கின்றன.

### நவீன தொழில்நுட்பமும் ஆதிமனித மூர்க்கமும்

இன்று, மனிதர்கள் முன்பைவிட வெகுவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். நமது அறிவு பன்மடங்கு வளர்ந்துகொண்டிருக்கிறது; அதனோடு சேர்ந்து நமது தொழில்நுட்பமும் அதே வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனாலும், குகையில் வாழ்ந்த காலத்தின் உள்ளுணர்வுகளை மனிதர்கள் இன்னும் தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, அந்தக் காலகட்டத்தின் மூர்க்க உணர்வுகளை. உயிரினங்கள் பிழைத்திருப்பதற்குத் தேவையான சில சாதகமான அம்சங்களை மூர்க்கம் என்பது கொண்டிருக்கிறதுதான். ஆனால், நவீனத் தொழில்நுட்பமும் ஆதிமனித மூர்க்கமும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ளும்போது, பூமியில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படும்.



© PA

### குழந்தைகள் மீதான தாக்குதல்கள்

அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக வெடிகுண்டுகள், ரசாயனங்கள் மற்றும் பிற ஆயுதங்கள் வழியில் சிரியாவில் இன்று நவீனத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். லட்சக் கணக்கான மக்கள் கொல்லப்படுவதையும் குழந்தைகள் குறிவைத்துத் தாக்கப்படுவதையும் நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது அறிவுபூர்வமான செயல் அல்ல.

கை கால்களை இழந்த நிலையில், அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இருக்கும் குழந்தைகளுக்கும் மின்சாரம் இல்லாததால் 'இன்குபேட்டரில்' (கண்ணாடிப்பெட்டிக்குள்) இறக்கும் பச்சிளம் சிசுக்களுக்கும் கிடைக்கக்கூடிய மனிதாபிமான உதவிகளையும் நிவாரணப் பொருள்களையும் கிடைக்க விடாமல் தடுப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமன்றி, கொடுமையன்றி வேறென்ன? இதையெல்லாம் குழந்தைகளைக் காப்போம் அமைப்பு பதிவுசெய்து வெளியிட உள்ளது.

சிரியாவில் நடைபெற்றுவருவது மிகவும் அருவருப்பானது. இதை ஒட்டுமொத்த உலகமும் அமைதியாகத் தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. நமது உணர்ச்சிபூர்வமான அறிவு எங்கே போனது? நமது சமூகத்தின் ஒட்டுமொத்த நீதியுணர்வு எங்கே போனது?

இந்தப் பிரபஞ்சத்தில் அறிவு என்ற விஷயத்தைக் கொண்ட உயிரினங்களைப்பற்றி நான் விவாதிக்கும்போது, மனித குலத்தையும் உள்ளடக்கியே சொல்கிறேன்; அந்த இனம், வரலாறு நெடுக, பெரும்பாலும் தான் பிழைத்திருப்பதற்கு உதவும் செயல்களில் ஈடுபட்டிருக்கவில்லை என்றாலும்கூட.

மனித குலம் நீண்ட காலம் பிழைத்திருப்பதற்கு மூர்க்கம் உதவுவதைப் போல அறிவு உதவுகிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும், தனிப்பட்ட இனத்தின் எதிர்காலத்துக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக எல்லாவற்றின் எதிர்காலத்துக்கும் சேர்த்து சிந்திக்கக்கூடிய தனித்துவமான திறனைக் கொண்டதுதான் மனித அறிவு.

### போதும் எல்லாம்

இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் சிரியாவின் குழந்தைகளைக் காப்பாற்றவும் நாமெல்லாம் ஒன்றுசேர்ந்து போராட வேண்டும். இந்த உள்நாட்டுப் போர் மிகவும் தீவிர நிலையை அடைந்து, எல்லா நம்பிக்கைகளையும் பொய்யாக்கியதை சர்வதேசச் சமூகம் மூன்று ஆண்டுகளாக ஓரத்தில் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தது. ஒரு தகப்பனாகவும் தாத்தாவாகவும் சிரியாவின் குழந்தைகள் பாதிக்கப்படுவதைக் கண்ணுற்று இப்போது நான் இதைச் சொல்லியே ஆக வேண்டும்: போதும், இனியும் வேண்டாம்.

### வேற்றுலகவாசிகளின் பார்வையில் நாம்

பிரபஞ்சத்துக்குள், தொலைவிலிருந்து பிற ஜீவராசிகள் நம்மைப் பார்த்தால் நாமெல்லாம் அவர்களுக்கு எப்படித் தெரிய வேண்டும் என்று யோசிப்பேன். பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது நாம் காலத்தால் பின்நோக்கிச் செல்கிறோம். ஏனென்றால், தூரத்திலுள்ள பிரபஞ்சப் பொருள்களிலிருந்து புறப்படும் ஒளி நம்மை வந்துசேர மிகமிக அதிகக் காலம் ஆகிறது. இன்று பூமியிலிருந்து வெளிப்படும் ஒளி வேற்றுலக உயிரினங்களுக்கு எதைக் காண்பிக்கும்?

நமது கடந்த காலத்தைப் பிறர் பார்க்கும்போது, நாம் நமது சகோதரர்களை எப்படி நடத்துகிறோம் என்பதையும், நமது சகோதரர்கள் நமது குழந்தைகளை எப்படி நடத்த நாம் அனுமதிக்கிறோம் என்பதையும் அவர்கள் பார்க்க நேரிடும். அந்தக் காட்சிகளெல்லாம் நாம் பெருமைப்படும் விதத்தில் இருக்குமா?

அரிஸ்டோட்டில் சொன்னது உண்மையல்ல என்பது நமக்கு இப்போது தெரியும்: பிரபஞ்சம் அநாதி காலமாக இருப்பது அல்ல. கிட்டத்தட்ட 1,400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பிரபஞ்சம் தோன்றியது. ஆனால், பேரழிவுகள் நாகரிகத்தின் பெரும் பின்னடைவுகள் என்று அவர் சொன்னது மிகச் சரியே. சிரியாவில் நடைபெற்றுவரும் போர் மனித குலத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய ஒன்றாக இல்லாமல் இருக்கலாம்.

ஆனால், நம்மை ஐக்கியப்படுத்தி வைத்திருக்கும் கட்டுமானத்தில் விழுந்த விரிசலாகத்தான் ஒவ்வொரு அநீதியையும் நாம் கருத வேண்டும். நீதிகுறித்த உலகளாவிய கோட்பாடு என்பது இயற்பியலை அடிப்படையாகக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், நாம் உயிர்வாழ்வதற்கு இயற்பியல் எவ்வளவு அடிப்படையானதோ அதேபோல் அந்த நீதியும் அடிப்படையானது. அது இல்லையென்றால், மனித குலம் வெகுநாள்கள் நிலைத்திருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமன் வாலாகும் ஆணைக்குழுக்கள்

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான ஒரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரவுள்ள நிலையில் - ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக சுயாதீனமான, நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என அறிக்கை சமர்ப்பிக்க உள்ள நிலையில் - மறுமுனையில் இலங்கை தன்னைப் பாதுகாப்பதற்காக ஆதரவு திரட்டல் முதல் அமெரிக்காவுடனான பேச்சுக்களை நடத்தல் வரை பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது.

அந்தப் பிரயத்தனத்தின் ஒரு பகுதி தான் காணமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு.

அமெரிக்கத் தீர்மானத்துக்கு முன்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதாகப் போக்குக் காட்டும் ஒரு ஆயுதமாகவே இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவைப் பயன்படுத்த ஆட்சியாளர்கள் நினைத்தனர். புலிகளே காணாமல்போனவர்களைக் கடத்தினர் என்று காட்டுவதே ஆணைக்குழுவின் பணியாக இருந்தது. ஆனால் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகிவிட்டது. பெரும்பாலான காணாமற் போதல்களுக்கு இராணுவமும், ஈ.பி.டி.பி.யினரும், கருணா குழுவுமே காரணம் என சாட்சியங்களை மக்கள் ஆணித்தரமாகப் பதிவு செய்தனர். ஆணைக்குழுவினர் திக்குமுக்காடும் அளவுக்கு சாட்சியங்கள் வலுவாக இருந்தன. அது அரசு வெட்டிய குழியிலிருந்து புறப்பட்ட பூதம். ஆனால் அரசு வெட்டாத குழியிலிருந்தும் இன்னொரு பூதம் புறப்பட்டு விட்டது.(அது படைகள் வெட்டிய குழிகளாக இருக்கலாம்) அவை தான் மன்னார் புதைகுழிகள்.

> அனுமன் நீட்டிய வாலில் அசுரர்கள் வைத்த தீ இலங்கையை எரித்தது. இலங்கை அரசு நீட்டும் வாலில் ஜெனீவாவில் மூட்டப்படும் தீ. நிச்சயமாக எரிக்க வேண்டியவற்றை அது எரித்தே ஓயும்.



இப்போது அரசை இரண்டு பூதங்கள் அச்சுறுத்துகின்றன. ஆனால் அந்தப் பூதங்களையும் தனக்குச் சாதகமாக ஜெனீவாவில் பயன்படுத்த அரசு முனையக் கூடும்.

ஒன்று - நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விசுவாசமாக நடைமுறைப்படுத்துவதாக ஒரு பம்பாத்து!

மற்றையது - புதைகுழிகள் தோண்டுவதன் மூலம் காணாமற் போனோர் பற்றிய ஆதாரங்களைத் தேடுவதாக இன்னொரு பம்மாத்து!

ஏற்கனவே செம்மணிப் புதைகுழி விவகாரம் கோமா நிலைக்குப் போய் விட்டது. மன்னார் புதைகுழியும் ஜெனீவா மாநாடு முடிய மறக்கப்பட்டு சாகடிக்கப்பட்டு விடலாம். அது இயற்கைச் சாவேனச் சாட்சி சொல்ல சீன நிபுணர்களும் வரலாம்.

ஆனால் காணாமற்போனோர் பற்றிய விவகாரம் பல தரப்பினர் மத்தியிலும் சூடேற்றி விட்டது.

இலங்கை அரசிடம் அதற்கும் மருந்துண்டு. அதற்கான அறிகுறியும் வெளிப் பட்டு விட்டது. அது தான் இராவணன் அரசவையில் வாலை நீட்டி நீட்டியே சுருட்டி ஒரு ஆசனம் அமைத்து இராவணேஸ் வரனை விட உயரத்தில் அமர்ந்த அனுமன் விளை யாட்டு.

அதாவது இராணுவத்தின் மீது குற்றம் இருப்பதற்கு வலுவான சாட்சியங்கள் கிடைத்தால் அதை விசாரிக்க தனியான ஆணைக் குழு நியமிக்கப் படும் என அதன் தலைவர் தெரிவித்து விட்டார்.

நல்லிணக்க ஆணைக் குழுவிலிருந்து காணா மற்போனோர் தொடர் பான விசாரணை ஆணைக் குழு பின்பு இராணுவம் பற்றி விசாரிக்க அதிலிருந்து ஒரு ஆணைக்குழு பின்பு குற்றம் சாட்டப் பட்ட இராணுவத்தை விசாரிக்க இராணுவ நீதிமன்றம். இப்படி அனுமன் வாலாக நீள்கின்றன ஆணைக் குழுக்கள்!

"இறுதியில் இராணுவத்தினர் குற்றம் செய்யவில்லை. மனிதாபிமான நடவடிக்கையிலேயே ஈடுபட்டனர்" என இராணுவ நீதிமன்றம் தீர்ப்பிடுவதும் உறுதி.

அனுமன் நீட்டிய வாலில் அசுரர்கள் வைத்த தீ இலங்கையை எரித்தது. இலங்கை அரசு நீட்டும் வாலில் ஜெனீவாவில் மூட்டப்படும் தீ, நிச்சயமாக எரிக்க வேண்டியவற்றை எரித்தே ஓயும்.

# துளிர்க்கும் நம்பிக்கை

சவுதி அரேபிய வரலாற்றில் முதன்முறையாக ஆங்கில நாளேடு ஒன்றின் ஆசிரியராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சவுதி அரேபியாவில் பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

'தனியாகக் கடைவீதிக்கு செல்ல கூடாது', 'தலை முதல் கால் வரை மறைக்கும் ஆடைகளை அணிந்து ஆண் துணையுடன் தான் வெளியே செல்ல வேண்டும்', 'வாகனங்களை ஓட்டும் உரிமம் மறுப்பு' எனப் பல்வேறு பெண்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

இந்தநிலையில் சவுதியின் ஜெட்டாவில் இருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழான 'சவுதி கெஸட்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக சொமய்யா ஜபர்தி என்ற பெண் நியமிக்கப்பட உள்ளார்.

இதுகுறித்து சொமய்யா ஜபர்தி கூறுகையில், "இப்போது தான் கட்டுப்பாடுகள் என்ற கண்ணாடி மாளிகையின் மேற்கூரை விரிசல் விட்டுள்ளது, விரைவில் வாசற்கதவும் விரிவடையும் என நம்புகிறேன். எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த பணியின் மூலம் சவுதியில் வாழும் பல பெண்கள் அடுத்தடுத்து ஊடக துறையில் தடம் பதிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் துளிர் விடுகிறது" என்று தெரிவித்துள்ளார்.



# இப்படியும் ஒரு பெண்

8 பேர் அடங்கிய ஒரு கும்பலால் கற்பழிக்கப்பட்டவர்தான் சுனிதா கிருஷ்ணன். அப்போது அவருக்கு வயது 15. ஆனால் 'இத்தோடு என் வாழ்க்கை போச்சே' என்று இடிந்து போய் முடங்கி விடவில்லை சுனிதா. அன்றே முடிவெடுத்தார், தன்னைப் போல் பாலியல் வன்முறைக்கு ஆளான குழந்தைகள், பெண்களை மீட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டும் என்று. நினைப்புடன் மாத்திரம் நில்லாமல் களத்தில் இறங்கவும் செய்தார்.



மாலினி என்கிற 15 வயதுச் சிறுமியை, அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர், விபசார விடுதியில் விற்றுவிடுகிறார். ஒரு வாடிக்கையாளருக்கு 6000 ரூபா என்ற கணக்கில், நாளொன்றுக்கு 50,000 ரூபா சம்பாதித்துக் கொடுக்க வேண்டும் அந்தப் பிஞ்சு. கேட்கவே மனம் பதறுகிறது. சிறைக் கைதியைப் போன்று அடைத்து வைக்கப்பட்ட அந்தக் குழந்தை வெளியே தப்பித்து வர 3 முறை முயன்றும், தோற்றுப் போனாள்.,இறுதியாக சுனிதா கிருஷ்ணனின் திறமையான செயற்பாடுகளால் மாலினி காப்பாற்றப்பட்டு, ஹைதராபாத்துக்கு மீட்டு வரப்பட்டிருக்கிறாள். ஒரு முறை, சமூக விரோதிகளிடமிருந்து சிறுமிகளைக் காப்பாற்றப் போன இடத்தில் வாங்கிய அடி உதையால், சுனிதாவின் வலது காது கேட்கும் திறனை இழந்துவிட்டது. பாலியல் தொல்லையால் பாதிக்கப்பட்ட 3000 க்கும் மேற்பட்ட குழந்தைகளை மீட்டெடுத்து மறுவாழ்வு அளித்துள்ளார் சுனிதா. வீழ்ந்தாலும் விருட்சமாகி நிழல் கொடுத்து நிற்கிறாள் இந்தச் சாதனைப்பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 26 – மார்ச் 04, 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# இழுபடும் விடுதலை

மழைவிட்டும் தூவானம் விடாத குறையாக ராஜீவ் கொலை வழக்கில் சந்தேக நபர்களின் கழுத்துக்குமேல் தொங்கிக்கொண்டிருந்த தூக்குக் கயிறு அகன்றபோதும், அவர்களின் சிறை வாசம் இன்னமும் நீள்கிறது.


உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் தங்களுடைய பிள்ளைகள் மீண்டும் வந்துவிடுவார்கள் என்று தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பெற்றோர் அகமகிழ்ந்தனர். அந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் விதத்தில் எவருமே எதிர்பாராத வண்ணம் சந்தேக நபர்களை விடுவிக்கும் தீர்மானத்தை தமிழக சட்டசபையில் நிறைவேற்றினார் முதல்வர் ஜெயலலிதா. ஆனால் அப்படி ஒரு தீர்மானத்தை தமிழகம் எடுத்ததை வடஇந்தியா விரும்பவில்லை. அதிலும் ராஜீவ் குடும்பத்தினருக்கும், காங்கிரஸ்கட்சிக்கும் இந்தத் தீர்மானம் வேப்பெண்ணையாகக் கசந்தது.

இதனை வெளிப்படையாக ராகுல் காந்தி விமர்சிக்கவும் செய்தார். தூக்குத் தண்டனைக் கைதிகளின் கருணை மனுவை 13 வருடங்களாக பார்வைக்கெட்டாத தூரத்தில் வைத்திருந்த இந்திய மத்திய அரசு இந்த விடயத்தில் மாத்திரம் அதி துரிதமாக இறங்கியது. 'தமிழக சட்ட சபை மூலம் கைதிகளை விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தவறான அணுகுமுறை உடையது. எனவே கைதிகளை விடுவிப்பதற்கு தடைவிதிக்க வேண்டும்' என்று அவசர வழக்கொன்றை மத்திய அரசு தாக்கல் செய்தது. மற்றைய வழக்குகளைத் தூக்கி எறிந்துவிட்டு இதனை விசாரித்த நீதிமன்றம் கேட்டுக்கேள்வி எதுவுமின்றி கைதிகளின் விடுவிப்புக்கு தற்காலிகத் தடை விதித்துள்ளது. அத்துடன் மத்திய அரசு தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்குமாறும் அது கோரியுள்ளது.

'ராஜீவ் வழக்குச் சந்தேக நபர்களை விடுவிக்குமாறு ஜெயலலிதா அவசரப்பட்டு உத்தரவிட்டு விட்டார்' என்று ஒருசாராரும், 'இல்லை. இல்லை அவர் துணிச்சலோடு மத்திய அரசுக்கு எதிரான இந்த முடிவை எடுத்திருந்தார்' என்று இன்னொரு சாராரும் தெரிவிக்கின்றனர். அவரின் அவசரத்தனமான முடிவாலேயே மத்திய அரசு கோபம் கொண்டு கைதிகளின் விடுவிப்பை இழுத்தடிப்பதாக தி.மு.க. உள்ளிட்ட சில கட்சிகள் விமர்சனமும் செய்கின்றன.

ஆனால் இப்போது தமிழக சட்டசபையை தி.மு.க. ஆட்சிபுரிந்தால் இத்தகைய துணிச்சலான முடிவை கருணாநிதி எடுத்திருப்பாரா என்பது சந்தேகமே. நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்துத்தான் இந்தக் கைதிகளை உடனடியாக விடுவிக்குமாறு ஜெயலலிதா அதிரடி அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும் இந்த அறிவிப்பின் மூலம் ஒரே நாளில் தமிழினத்தின் தலைவியாக உயர்ந்து விட்டார். அவருடைய தீர்மானத்தை நீதிமன்றில் சரியான முறையில் விளக்கிவிட்டால் இந்தத் தடை விலகிவிடும் என்று நம்பப்படுகிறது. கைதிகள் 23 வரு டங்களுக்குப் பின்னர் வெளியுலகைக் காணமுடியும். இத்தனை நாளும் பொய்யான குற்றச் சாட்டுக்களை சுமந்துநின்ற கைதி களுக்கு இனியாவது கிடைக்கவேண்டும் விடுதலை.

# விரியும் புதைகுழி



பூமுகன்

இதுவரை (இந்தப் பத்தி எழுதப்படும் வரை) 29 தடவைகள் தோண்டப்பட்டிருக்கிறது மன்னார் திருக்கேதீஸ்வரம் புதைகுழி. எதேச்சையாக வெளிக்கிளம்பிய மனித எச்சங்களால் புதைகுழியா எனச் சந்தேகிக்கப்பட்ட இடம் என்று சர்வதேச அளவுக்கு கவர்ந்து நோக்கப்படும் மிகப்பெரும் மனிதப்புதை குழியாக மாறியிருக்கிறது.

கடந்த வருடம் டிசெம்பர் 20 ஆம் திகதி அந்தப் பகுதியில் குடிதண்ணீர் இணைப்புக்காக குழிகளை வெட்டியபோது இந்த மனிதப் புதைகுழி மண்ணோடு மண்ணாகி மறைந்திருந்தமை தெரியவந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அதன் ஆழமும் நீளமும் விரிந்துகொண்டே செல்கிறது.

காணாமற்போன உறவுகளைத் தேடி தமிழ் மக்கள் தெருவோரங்களில் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரிகையில் எவருக்கும் தெரியாத மயான இடங்களில் எலும்புக் கூடுகள் வெளிக்கிளம்புவது பெரும் சந்தேகங்களை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம் புனித திருத்தல பிரதேசத்தில் நெடுங்காலமாக இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. அது ஒரு உயர் பாதுகாப்பு வலயம். குறிப்பாக தள்ளாடி இராணுவ முகாமுக்கு பிற்பகுதியாக, தள்ளாடி இராணுவ முகாமுக்கு பாதுகாப்பு அளிக்கும் முகமாக அந்தப் பெரும் பிரதேசம் இராணு வக் கட்டுப்பாட்டில் நீண்ட காலமாக இருந்திருக்கிறது.

இந்த இராணுவ ஆளுகைப் பிரதேசம் வெட்டவெளிகளையும் பற்றைக் காடுகளையும் உவர் வெளிகளையும் கொண்டது. ஆள்கள் நடமாட்டம் அற்ற அந்தப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் எவையும் இருக்கவில்லை. எப்போதும் ஆபத்தான பகுதியாகவே அது காட்சிதரும்.

90 களின் பிற்பகுதியில் மன்னார் பகுதியில் இருந்து பலர் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர். இவை தவிர தள்ளாடி முகாமுக்கு விசாரணைக்காக அழைக்கப்படுபவர்கள் மீண்டுவராத பல சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த ஊகங்களை புதைகுழியோடு ஒப்பிடுகையில் அதன் போக்கு சிறிதாகவே புலப்படுகிறது.

குறிப்பாக அந்தக் காலப்பகுதியில் தமது காணிகள் சொத்துக்களை பார்க்கச் சொல்லும் பலர் காணாமற் போன சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. ஆனால் இவர்களுக்கு என்ன ஆனது? பிடிக்கப்பட்டனரா கொல்லப்பட்டனரா? போன்ற எந்தத் தகவல்களும் இதுவரை இல்லை. இப்படி இருக்கையில் திருக்கேதீஸ்வரம் புனித பிரதேசத்தில் வெளிக்கிளம்பும் மனித எச்சங்கள் 90 களின் பிற்பட்ட காணாமற்போதல்களின் சாட்சிகளாகவே தென்படுகின்றன.

29 தடவைகள் தோண்டப்பட்ட இந்த புதைகுழியில் இருந்து 79 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் பெண்களின் வளையல்கள் கழுத்தில் அணியும் மாலைகளுக்கான முத்துக்கள், குழந்தையின் பல், ஐந்து ரூபா நாணயக்குற்றி வடிவிலான செப்பு உலோகம் என்பன போன்ற தடயப் பொருள்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை முக்கியமான ஆதாரங்கள் எவையும் அதில் கண்டுபிடிக்கப்படவில்லை. குறிப்பாக இந்த மனிதப் புதைகுழி 6 வருடங்களுக்கு உட்பட்டது என்ற பதிவே தெரியவருகிறது.

அரசு இந்தப் புதைகுழியை மயானங்களாக காட்டுவதற்கு முற்படுகின்றது. குறிப்பாக அந்தப் பகுதியில் இடுகாடுகள் இருந்தமைக்கான எந்தப் பதிவும் இல்லை. அது தவிர திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு எதிரே கோவிலைப் பார்த்தபடி புதைகுழி அமைந் திருப்பதாகவும் அதனூடாக வேறு கதைகளை கட்டிவிடவும் அரசு முயற்சிக்கிக்கிறது.

உண்மையில் இந்தப் புதைகுழி ஒரு குறிப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட ஒன்று. அதற்குக் காரணமானவர்கள் புதைகுழிக்கு அருகிலேயே தற்போதும் இருக்கிறார்கள். இதன் உண்மை விசாரணை மன்னாரில் இருந்து தொடங்க வேண்டும். தள்ளாடி முகாமில் என்ன நிகழ்ந்தது என்பதை அறியவேண்டும். அதனூடாகவே தோண்டத்தோண்ட விரியும் இந்தப் குதைகுழியின் உண்மை நிலை தெரியவரும்.

### புதைகுழி மீட்பு விபரம்

| திகதி | மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் |
|---|---|
| 20.12.2013 | 4 |
| 21.12.2013 | 2 |
| 22.12.2013 | 5 |
| 03.01.2014 | 4 |
| 04.01.2014 | 3 |
| 06.01.2014 | 8 |
| 07.01.2014 | 6 |
| 16.01.2014 | 4 |
| 17.01.2014 | 1 |
| 18.01.2014 | 3 |
| 22.01.2014 | 3 |
| 23.01.2014 | 1 |
| 25.01.2014 | 1 |
| 27.01.2014 | 3 |
| 28.01.2014 | 5 |
| 29.01.2014 | 2 |
| 10.02.2014 | 3 |
| 11.02.2014 | 1 |
| 12.02.2014 | 2 |
| 13.02.2014 | 1 |
| 17.02.2014 | 2 |
| 18.02.2014 | 3 |
| 19.02.2014 | 3 |
| 20.02.2014 | 5 |
| 21.02.2014 | 2 |
| 22.01.2014 | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் காசில் சூனியம்

ஹரீஸ்

போரின் வடுக்களை தாங்கி வாழும் மக்களின் துயரம் இன்னும் ஆற்றப்படாமலே இருக்கின்றது. அழுகையும், ஏக்கமும், வலிகளும்,

அகதிவாழ்வும் என அப்பாவி மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையை அல்லாடித் தள்ளாடியே கழித்து வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் நடைபெறும் நில அபகரிப்பில் மக்களின் வீடுகளும் வாழிடங்களும் தொழில் சார் வளங்களும் பறிக்கப்படுகின்றன. காணாமல் போனோரின் உறவுகள் இன்னமும் கண்ணீர்க் கதைகளை சுமந்தபடி தம்மிடம் எஞ்சியிருக்கும் தம் உறவுகளின் புகைப்படங்களுடன் தேடி அலைந்தபடியே இருக்கின்றனர். டெல்றொக்சன், நிமலரூபன் என நீளும் சிறைச்சாலைப் படுகொலைகளால் காரணம் தெரியாமல் விசாரணைகளின்றி சிறைவாசத்தை அனுபவிக்கும் தமது உறவுகளும் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் கொல்லப்படுவார்களா என்ற அச்சம் இன்னமும் அவர்களினை விட்டகல்வதாக இல்லை.

ஆனாலும் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் கூட்டத்தொடர், பொதுநலவாய மாநாடு என்பவற்றில் அரசு உண்மைக்கு மாறான பல கதைகளை அவிழ்த்துவிட்டிருந்தது.

"மக்கள் வழமைக்குத் திரும்பி விட்டார்கள். அரசியல் கைதிகள் என்று யாருமே இல்லை. முன்னாள் போராளிகள் யாருமே தடுப்பில் இல்லை. மக்கள் ஜனநாயகக் காற்றை சுவாசிக்கின்றனர். நல்லிணக்கம், சகோதரத்துவம், ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்கிறது. அப்பாவி மக்கள் மீது ஒருதுப்பாக்கிச் சன்னம் கூட பாயாமல் நடத்தப்பட்ட மனிதாபிமான படைநடவடிக்கையால்

அச்சமற்ற சூழலை அடைந்துள்ளனர்" – என்பன போன்ற கதைகளே கடந்த காலத்தில் அரசு புனைந்து தள்ளிய நல்ல பிள்ளைக் கதைகளாக இருந்தன. ஆனால் சர்வதேசம் அவர்களின் கதைகளை நம்பும் அளவுக்கு முட்டாள்தனத்தோடு இல்லாமையினால் தாம் புனைந்த கதைகளை உண்மையாக நடைமுறைக்கு கொண்டுவர அவகாசம்



கேட்கும் நிலை அரசுக்கு உருவாகிவிட்டது.

இதேவேளை போர்க்குற்றச் சாட்டுகளில் தம்மையும், தமதுபடைகளையும் காப்பாற்றுவதற்காக "எமது இராணுவத்தினர் பத்தரை மாற்றுத் தங்கங்கள்" என நிறுவுவதிலும் புதிய புதிய திட்டங்களை வகுத்து இலங்கை அரசு செயற்படுத்திக் கொண்டிருக்கிறது.

புலிகளை இரத்த வெறியர்களாகவும் இலங்கை இராணுவத்தினரை மனிதாபிமான மீட்பர்களாகவும் காட்டுவதன் ஊடாக சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறைகளிலிருந்து தப்பித்து விடலாம் என்பதே அரசின் நிகழ்காலத்திட்டம்.

சனல்–4 உட்பட பல் ஊடகங்கள் மனித உரிமைக் கூட்டத்தொடர் காலங்களில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான வீடியோக் காட்சிகளை வெளியிட்டு வருகின்றன. இதன் மூலம் இலங்கையின் நல்லபிள்ளைத்தனத்தை தோலுரித்துக் காட்டும் பணியை இந்த ஊடகங்கள் செவ்வனே செய்கின்றன. முள்ளை முள்ளால் எடுப்பது போல தனக்குத் தொல்லை தரும் காணொலிகளுக்கு மாற்றாக தனக்குச் சார்பான காணொலிகளை உருவாக்க அரசு முனைகின்றது.

முன்னரும் சில தடவைகள் இப்படியான நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் இறங்கியிருந்தனர். குறிப்பாக கைகள் கட்டப்பட்டு ஆடைகள் களையப்பட்டு பலரை இலங்கைப் படைகள் கொல்லும் காணொலியை அப்படியே 'பிளேட்டை' மாற்றும் வகையில், பின்னணியில் தமிழில் உரையாடுவது போல 'டப்பிங்' செய்து இலங்கை அரசு வெளியிட்டிருந்தது. ஆனாலும் அது போலியானாது என்பது நிரூபிக்கப்பட்டதால் மீண்டுமொருமுறை வழக்கம் போல இலங்கை தலைகுனிந்தது.

எத்தனை சூடு வாங்கினாலும் இலங்கைக்கு சுரணை வராது போலும். இப்போது புதிய காணொலியொன்றை இலங்கை வெளியிட்டிருக்கிறது. அந்தக் காணொலியில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கருத்து ஒன்றும் பதிவாக்கப்பட்டுள்ளது.

அதில் மக்களின் மனதில் இருந்து போரின் வடுக்களை ஆற்ற பத்து வருடங்களாவது தேவை என்று சர்வதேசத்திடம் அவர் அவகாசமொன்றை கேட்டிருக்கிறார். லலித் வீரதுங்க சொல்லும் இந்த மனவடுவை மாற்ற 10 வருடங்கள் தேவை என்ற கோரிக்கை உண்மையானால் இது வரை அரசதரப்பால் சொல்லப்பட்ட கதைகள் அனைத்தும் வெறும் பம்மாத்துதானா என்ற கேள்வியே சர்வதேசம் முன் விரிகின்றது.

லலித் வீரதுங்க சொல்வதைப் போல் போர் முடிந்து நான்காண்டு ஆகிவிட்டன. ஆனால் அதனால் உண்டான மனக்காயத்தை மாற்ற இன்னும் 10 வருடங்கள் தேவையென்கின்றார். அப்படியென்றால் 14வருடமாக நீடிக்கக்கூடிய மனக்காயம் ஏற்படுமளவுக்கு போரால் பாரதூரமான இழப்புகளை தமிழ் மக்களுக்கு அரசு பரிசளித்திருக்கிறது என்றுதானே அர்த்தம். மக்கள் மீது ஒருதுப்பாக்கிச் சன்னம் கூடப் பாயாமல் தங்களின் படை நடவடிக்கை இருந்ததாக அரசு சொன்னது உண்மையென்றால் எப்படி 14 வருடமாக சீழ் பிடித்து மாறாமல் மனக்காயம் இருக்கும்?

2 ஆம் உலகப் போரில் அணுக்குண்டு தாக்குதலுக்கு இலக்கான ஹிரோசிமா, நாகசாஹி நகரங்கள் கூட 10 வருடங்களில் பழையபடி உயிர்த்தெழுந்திருந்தன. ஆனால் இலங்கை இறுதிப்போரில் ஏற்பட்ட மனக்காயங்களுக்கு மருந்திட்டு மாற்ற 14 வருடங்கள் தேவை என்று அரச தரப்பு சொல்வதன் மூலம். அணுகுண்டால் ஏற்பட்ட பேரழிவை விடவும் மோசமான அழிவை மக்கள் சந்தித்திருக்கிறார்கள் என்று இலங்கை ஒப்புக்கொண்டுள்ளது. தானே அர்த்தம். இவ்வளவு நீண்ட காலம் மாறாத்தன்மையான மனவடுவை ஏற்படுமளவுக்கு இலங்கைப்படைகள் கொடூரமாக நடந்து கொண்டுள்ளன என்றும் அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும். கால அவகாசம் கேட்க நினைத்து கடைசியில் தான் புரிந்த நாசகாரப்போரின் சுயரூபத்தை உளறிவிட்டது இலங்கை. ஆக மொத்தத்தில் சொந்தக் காசிலேயே தமக்குச் சூனியம் வைத்துள்ளனர் மஹிந்தவாதிகள்.

# நிம்மதிக்கான போராட்டம்

சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட கைதிகளின் விடுதலையை உலகத் தமிழர்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். நீதிமன்ற உத்தரவு, தமிழக முதல்வரின் அதிரடி உத்தரவு என்பவற்றால் கைதிகளின் விடுதலை கைக்கெட்டிவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்த சமயத்தில் இந்திய மத்திய அரசின் அவசர வழக்குத் தாக்கல் அந்தக் கனவுக்கு தற்காலிகத் தடை போட்டுவிட்டது.

இந்திய மத்திய அரசு தாக்கல் செய்த இந்த வழக்கால் கைதிகளின் விடுதலை கானல் நீராக மாறிவிடுமோ என்ற அச்சம் பலரிடத்தே உண்டாகியிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே அப்படி நடந்துவிடுமா?

அடுத்த மாதத்துடன் காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வருகிறது. அதன் பின்னர் கருத்துக்கணிப்புகளின்படி நரேந்திரமோடி தலைமையில் பா.ஜ.க.வே ஆட்சிபீடம் ஏறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நரேந்திரமோடி ஆட்சிக்கு வந்தால் மிக முக்கியமான அமைச்சுப் பொறுப்பு ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமிக்கு வழங்கப்படக்கூடும். அவ்வாறு நடந்தால் தமிழின விரோதியான அவர் இந்தக் கைதிகளின் விடுவிப்பை இன்னும் இழுத்தடித்து வழக்கை வேறு பக்கம் திருப்பி அவர்களை நிரந்தரக் கைதிகளாக்கவே முயல்வார். ஆனால் அப்படி நடக்க இந்திய சட்டத்துறை இடமளிக்குமா என்பதும் கேள்விக்குறியே.

பலரும் பயப்பிடுவதுபோல இந்தக் கைதிகளின் விடுதலை எட்டாக்கனியான விடயமல்ல. எப்படித்தான் வழக்குகள் போடப்பட்டாலும் அவர்கள் விடுதலை பெறுவதை எவரும் தடுக்கமுடியாது என்று கூறுகிறார் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி சந்துரு.

"என்னதான் வழக்குப்போட்டாலும் கடைசியில் அந்த வழக்கு உச்சநீதிமன்றத்துக்குத்தான் செல்லப்போகிறது. அதனால் தான் ஏற்கனவே வழங்கிய தீர்ப்பை ஒருபோதும் உச்சநீதிமன்றம் மாற்றப்போவதில்லை. வேண்டுமானால் கைதிகளின் விடுவிப்பை தாமதப்படுத்தலாம். ஆனால் ஒருபோதும் அவர்களின் விடுதலையைத் தடுக்க முடியாது" என்று அவர் சொல்லியிருப்பது பலரது வயிற்றில் பாலை வார்த் திருக்கிறது. இந்த நிலை யில் விடுவிக்கப்படும் கைதிகளில் இலங்கை யைச் சேர்ந்தவர்களின் கதி என்ன என்பது கேள் விக்குறியாக இருக்கிறது.

ஈழத்தைச் சேர்ந்த கைதிகளை விடுதலைக் குப் பின்னர் இந்தியாவில் தங்க அனுமதி வழங்கா விட்டால் அவர்கள் இலங்கைக்கோ அல்லது வேறுநாடுகளுக்கோதான் செல்லவேண்டும். அப்படிச் செல்வதாயினும் கடவுச்சீட்டு அவசியம். அவர்கள் கடவுச்சீட்டைப் பெறவேண்டுமானால் இலங்கைக்கு வந்தே ஆகவேண்டும். அப்படி வரும் போது நிச்சயமாக அவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்படுவதும் அதன் பின்னர் விசாரணைகளின்றி சிறைகளுக்குள் முடக்கப்படுவதும் நடந்தேறக்கூடும். எனவே விடுதலையின் பின்னரும் நிம்மதிப்பெருமூச்சை விடமுடி யாதவர்களாக இந்தக் கைதிகள் உள்ளனர். அவர்களை மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவிலேயே தங்க வைப்பதற்கு இந்திய அரசை வலியுறுத்த வேண்டும். அதற்கு இப்போதே தமிழர் ஆதரவு அமைப்புக்கள் முயற்சிகளில் இறங்கியுள்ளன. இத்தனை நாளும் தூக்குக் கயிற்றை அறுக்கப் போராடியவர்கள் இனிமேல் விடுதலையாவோரின் நிம்மதியான எதிர்காலத்துக்காகவும் போராட வேண்டியிருக்கிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஒளண்யன்




"இந்த வழக்கின் இறுதித்தீர்ப்பு வரும் வரை யூலியன் அசாஞ்சேயை பிணையில் இந்த நீதிமன்றம் விடுவிக்கிறது. ஆனால் அதற்காக 2 மில்லியன் பவுண்ட்ஸ் பிணைத்தொகை செலுத்தப்பட வேண்டும். அத்துடன் வழக்கு முடியும் வரை யூலியனின் பாஸ்போர்ட்டையும் நீதிமன்றம் முடக்கி வைக்கும். லண்டனில் யூலியனை தங்க வைப்பவரே, அவரை வழக்கு முடியும் வரை நீதிமன்றத்துக்கு கொண்டு வரவேண்டிய பொறுப்புடையவர்."

நீதிமன்றம் சொல் லச் சொல்ல யூலியனின் முகம் மலர்ந்தது.

ஆனால் இந்தத் தீர்ப் புக்குள்ளும் ஒரு தந் திரம் மறைந்திருக் கவே செய்தது. உடனடியாக 2 மில்லியன் டொல ரைப் பிணைப் பணமாகச் செலுத்தக் கூடிய ஒருவரை யூலியன் கண்டுபிடிக்க வேண்டும். அத்துடன் எப்போதும் பொலிஸ் கண் காணிப்பில் யூலியனை தங்களுடன் வைத் திருக்கவும் யாரேனும் சம்மதிக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தியா னால் மாத்திரமே யூலியன் பிணையில் வெளியே செல்ல முடியும்.

இப்படி ஏதாவது தில்லாலங்கடி வேலை களில் பிரிட்டன் இறங்குமென்று யூலியனின் ஆதரவாளர்கள் ஊகித்திருந்தனர். அதேவேளை யூலியனுக்கு ஏழைகள் முதல் கோடீஸ்வரர்கள் வரை ஆதரவாளர்கள் இருந்தனர். எனவே நீதிமன்றத்தின் பிணை அனுமதி கிடைத்த மறுகணமே சுளையாக 2 மில்லியன் டொலரை யூலியன் ஆதர வாளர்கள் கட்டியதும், பிரிட்டன் அரசுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

அத்தோடு யூலியனைத் தம்மோடு தங்க வைப்பதற்கும் நீ, நான் என்று பலர் போட்டி போட்டார்கள். கடைசியில் வோகன் ஸ்மித் என்பவரின் பண்ணை வீட்டில் தங்குவதென முடிவு செய்யப்பட்டது.

"600 ஏக்கர் பரப்புள்ள எனது பண்ணையில் உள்ள வீட்டில் யூலியன் தங்கியிருப்பார். எப்போதெல்லாம் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டுமோ அப்போதெல்லாம் நானே அவரைக் கொண்டுவருகின்றேன். தேவைப்பட்டால் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு எனது பண்ணைவீட்டுக்கு வந்து யூலியனை விசாரிக்கவும் சம்மதிக்கிறேன்" என்று எழுதிக்கொடுத்துவிட்டு யூலியனை அழைத் துக் கொண்டு வெளியேறினார் வோகன் ஸ்மித். "வம்பை விலை கொடுத்து வாங்கும் முட்டாள் போலும்" என்று வோகனைக் கேலியோடு நோக்கினார்கள் பிரிட்டன் பொலிஸார்.

ஏனெனில் ஆமை புகுந்த வீடு போல யூலியன் இருக்குமிடமெல்லாம் ஏதேனும் குழப்பங்கள் விளைந்தே தீரும். போதாக் குறைக்கு இப்போது அமெரிக்காவின் கழுகுப்பார்வை வளையத்துக்குள்ளும் யூலியன் சிக்கியிருந்தான். எப்படியும் அவன் தங்கியிருக்கும் இடத்தில் நிம்மதி யாகவா இருக்க விடுவார்கள்?

ஆனால் யூலியன் எதைப்பற்றியும் கவலைப் படவில்லை. அவனிடம் இப்போதைக்கு எந்தத் திட்டமும் இருக்கவில்லை. ஆனாலும் ஏதாவது உருப்படியாகச் செய்வதற்கு வெளியில் செல்ல வேண்டும். சிறைக்குள் இருந் தால் எதையுமே செய்ய முடியாது. எப்போது இறுதித்தீர்ப்பு வெளியிடப்படப் போகிறதென்று தெரியாது. ஆயினும் கிடைத்திருக்கும் சிலநாள் அவகாசத்தில் ஏதாவது வழியைக் கண்டுபிடித்து விடலாம் என்று நம்பினான். 'எவ்வளவோ பண்ணினவனுக்கு இதைப் பண்ணத்தெரியாதா?'

நம்பிக்கை, நிம்மதியும் முகத்தில் மீண்டும் குடிவந்துவிட, வோகன் கொண்டு வந்த வாகனத்தில் ஏறியமர்ந்தான் யூலியன். ஆதரவாளர்களின் பெரும் ஆரவாரத்துக்கிடையில் வாகனம் உறுமிக் கொண்டு புறப்பட்டது.

"போ யூலியன் போ. எங்கே போய்விடப் போகிறாய்? எங்கே போனாலும் மிக விரைவில் குண்டுக்கட்டாக உன்னை சுவீடனுக்கு அனுப்பத்தானே போகிறோம்" உள்ளுக்குள் பிரிட்டன் பொலிஸ் கறுவிக்கொண்டது.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

## 17 வயதுத் தாத்தா

**"நா**ன் உலகை மாற்ற முயல்கிறேன். என்னால் அதைச் செய்யமுடியும் என்று தன்னம்பிக்கையோடு சொன்ன சாம் பேர்ன்ஸ் இப்போது உயிரோடு இல்லை. காலம் அவரை இந்த வருடம் ஜனவரி 10 ஆம் திகதி விழுங்கிவிட்டது. சாமின் மறைவை நினைத்து எல்லோரும் பேசிக்கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன விசேசம் அவரில்?

அவர் முதிரா முதுமை என்ற விநோத நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். உடலின் வளர்ச்சி துரிதமாக நிகழ்ந்து, சிறுவயதிலேயே முதுமைக்குரிய தோற்றம் வந்துவிடும். துள்ளித்திரிய வேண்டிய கட்டிளமைப் பருவத்தில் பொல்லுப்பிடித்து நடக்கும் தாத்தாவாக திரிய வேண்டியிருக்கும். கோடியில் ஒருவருக்கு மாத்திரமே வரக்கூடிய இந்தக்கொடிய முதிரா முதுமை நோயால் பாதிப்புற்றவர்கள் 15 வயது வரை வாழ்வதே அதிசயம் தான்.



ஆயினும் சாம் பேர்ன்ஸ் 17 வயது வரை மகிழ்ச்சியோடு வாழ்ந்தார். தன்னைப்போல பாதிப்பு எவருக்கும் வரக்கூடாது என்பதற்காகப் பாடுபட்டார். இவருடைய வாழ்க்கைக்கான போராட்டத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட ஆவணப்படம் 2012 ஆம் ஆண்டு சிறந்த ஆவணப்படத்துக்கான ஒஸ்கார் விருதினை வென்றது.

தன் நோயைப் பெரிதாக நினைத்து மூலையில் முடங்கிக் கிடக்காமல் இருக்கும் நாள்களை மகிழ்வோடும், பயனுள்ளதாகவும் மாற்றினார் சாம். ஓவியம், அறிவியல், சினிமா என்று பலதுறைகளிலும் ஈடுபட்டார், சமூகசேவைகளிலும் இறங்கினார். இந்த சின்ன வயதுத்தாத்தா.

எப்போதும் புன்னகையோடு வலம் வந்த சாம் பேர்ன்ஸைப் பார்த்து தன்னம்பிக்கையின் வரவிலக்கணத்தை உலகம் பெற்றுக் கொண்டது. புன்னகையின் அரசனான சாம் இந்தவருடம் மறைந்து போனாலும் தன்னம்பிக்கையின் வடிவமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 1

# சாயியே சரணம்

*சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.*

### பாபா ஏன் கோதுமை அரைத்தார்?

1910 ஆம் ஆண்டுக்குப் பின் ஒருநாள் காலை நேரத்தில் மசூதிக்கு சீரடி பாபாவைத் தரிசிப்பதற்காகச் சென்றிருந்தேன். அங்கு பின்வரும் நிகழ்ச்சியைக் கண்ட நான் ஆச்சரியத்தால் பரவசப்பட்டேன். தன் முகம், வாய் இவற்றைக் கழுவிய பின்பு சீரடி பாபா கோதுமை மா அரைக்கத் தயார்ப்படுத்தலில் இருந்தார். ஒரு சாக்கைத் தரையில் விரித்து அதன் மேல் திரிகையை வைத்தார். பின்பு கொஞ்சம் கோதுமையை எடுத்து திரிகைக் குழியில் இட்டார். திரிகையைச் சுற்றி கோதுமையை அரைக்கத் தொடங்கினார். பிச்சை எடுத்து வாழ்ந்து எவ்வித உடைமையும் சேமிப்பும் அற்ற இவர் கோதுமை மா அரைக்கவேண்டிய வேலையென்ன என்று நினைத்தேன். அங்குவந்த சிலரும் அவ்வாறே எண்ணினார்கள். ஆயினும் ஒருவருக்கும் பாபா என்ன செய்கிறார் என்று கேட்கத் துணிவு வரவில்லை. பாபா மாவை அரைக்கும் இந்தச்செய்தி உடனே கிராமத்தில் பரவி ஆண்களும் பெண்களும் பாபாவின் செய்கையைக் காணப் பெருந்திரளாக மசூதிக்கு வந்தனர். கூட்டத்திலிருந்த துணிவுள்ள நான்கு பெண்மணிகள் பாபாவுக்கு அருகில் வந்து பாபாவை ஒதுக்கிவிட்டு பாபாவின் லீலைகளைப் பாடியவாறே மாவரைக்கத் தொடங்கினர்.

முதலில் பாபா கடுங்கோபம் அடைந்தார். ஆயின் அந்தப் பெண்மணிகளின் அன்பையும் பக்தியையும் கண்டு மிக்க சந்தோஷம் அடைந்து புன்னகை புரியலானார். அவர்கள் அவ்வாறு அரைத்துக்கொண்டிருக்கையில் பாபாவுக்கு வீடோ, பிள்ளைகளோ அன்றி அவரைக் கவனிக்க யாருமே இல்லையாதலாலும் அவர் பிச்சை எடுத்து வாழ்ந்தாராதலாலும் அவருக்கு ரொட்டி, பாண் செய்ய கோதுமை மா தேவையில்லை. எனவே இவ்வளவு அதிகமான மாவை என்ன செய்வார்? ஒருவேளை பாபா அன்பாயிருக்கும் காரணத்தால் இந்த மாவை நமக்குப் பகிர்ந்துகொடுத்துவிடுவார் என்றாவறு எண்ணமிட்டபடி பாடியவாறே அரைத்து முடித்து திரிகையை ஓரத்தில் நகர்த்திவிட்டு கோதுமை மாவை நான்கு பிரிவாகப் பிரித்து ஆளுக்கு ஒவ்வொரு பகுதியாக எடுத்துக்கொள்ளத் தொடங்கினார். இதுவரை அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்த பாபா கோபமடைந்து "பெண்களே உங்களுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா? யாருடைய அப்பன் வீட்டுப் பொருளை இவ்வாறு அபகரிக்கிறீர்கள். நீங்கள் தடங்கல் இன்றி மாவை எடுத்துச் செல்வதற்கு நான் முன்னம் உங்களிடம் கடன்பட்டிருக்கிறேனா? தயவுசெய்து இப்போது இதைச் செய்யுங்கள். இந்த மாவை எடுத்துச் சென்று கிராம எல்லைகளில் கொட்டிவிட்டு வாருங்கள்" என்றார். இதைக் கேட்டபின் அவர்கள் வெட்கமடைந்து தமக்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு கிராம எல்லைக்குச் சென்று பாபா குறிப்பிட்டபடியே அங்கே மாவை பரப்பிவிட்டார்கள். பாபா ஏன் இப்படி செய்தாரென்று சீரடி மக்களை வினாவினேன். கொலாரா நோய் கிராமத்தில் பரவிக்கொண்டு இருப்பதாகவும் அதை எதிர்க்க பாபாவின் பரிகாரமே இது என்றும் அவர்கள் கூறினர். கோதுமை அரைக்கப்படவில்லை மாறாக கொலரா என்ற நோயே அரைக்கப்பட்டு கிராமத்துக்கு வெளியில் கொட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் பின்னர் கொலரா மறைந்து கிராம மக்கள் மகிழ்ச்சியுற்றனர். நானும் இவற்றையெல்லாம் அறிந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அதே சமயம் எனக்கு ஆச்சரியம் விளைந்தது. கொலராவுக்கும் கோதுமை மாவுக்கும் பூவுலகில் உள்ள ஒற்றுமை யாது? சாதாரணமாக அவைகளுக்கு உள்ள உறவு என்ன? அவை இரண்டையும் எங்ஙனம் இணைக்க முடியும்? இந்தநிகழ்ச்சி விவரிக்க இயலாததாய் இருக்கின்றது. நான் இதைப்பற்றிச் சிறிது எழுதி என் மனம் நிறைவடையும்வரை பாபாவின் இனிக்கும் லீலைகளைப் பாடுவேன். இந்த லீலையைப் பற்றி இவ்வாறாக எண்ணமிட்டபின் என் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. இங்ஙனம் நான் பாபாவின் வாழ்க்கை வரலாறான ஸத் சரிதத்தை எழுத உணர்ச்சியூட்டப்பட்டேன். பாபாவின் அருளுடனும் ஆசியுடனும் இப்பணி செவ்வனே வெற்றிகரமாகச் செய்யப்பட்டது என்பதையும் நாமறிவோம்.

### மாவரைத்ததன் தத்துவ உட்கருத்து

சீரடி பாபா ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் சீரடியில் வாழ்ந்தார். இந்த நீண்ட காலத்தில் அவர் பெரும்பாலும் தினசரி அரைத்தார். கோதுமையை மாத்திரமன்று பாவங்கள் உள்ளம், உடல் ஆகியவற்றின் துன்பங்களையும் கணக்கில்லாத் தன் அடியார்களின் தொல்லைகளையும் அரைத்து தீர்த்தார். காமம், பக்தி என்ற இரண்டு கற்கள் அவர் திரிகையில் இருந்தது. முன்னது கீழ்க்கல்லாகும். பின்னது மேற் கல்லாகும். பாபா பிடித்து அரைத்த கைப்பிடி ஞானமாகும். சத்துவ, ராஜச, தாமச என்ற முக்குணங்களைச் சேர்ந்த நமது எல்லா உணர்ச்சிகள், ஆசைகள் பாவங்கள், அகங்காரம் இவைகளை துகளாக்கி முன்னோடி வேலையாக அரைக்கப்பட்டாலின்றி ஞானம் அல்லது தன்னை உணர்தல் என்பது முடியாதென்பது பாபாவின் உறுதியான தீர்ப்பாகும்.

கபீரின் ஒரு நிகழ்ச்சியை இது ஞாபகமூட்டுகிறது. ஒரு பெண்மணி சோளத்தை அரைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு அவர் தன் குரு நிபதிரஞ்ஜனரிடம் "திரிகையில் இடப்பட்ட சோளத்தப் போன்று இவ்வுலக வாழ்க்கை என்னும் திரிகையால் நசுக்கப்படும்போது நான் அஞ்சுவதனால் அழுகிறேன்" என்று கூறினார். நிபதிரஞ்ஜனர் "பயப்படாதே நான் செய்வது போல் இந்தத்திரிகையில் உள்ள ஞானமென்னும் பிடியைப் பிடித்துக்கொள். அதிலிருந்து நெடுந்தூரம் சென்று திரியாதே. ஆயின் உட்புறமாகத் திரும்பு அப்போது நீ காப்பாற்றப்படுவது நிச்சயம்" என்று பதிலளித தாராம்.

(ஞானத்தை இன்னும் தேடுவோம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம் எங்கே?

தண்டலை மயில்கள் சாக
தாமரைக் குளங்கள் காய
கொண்டலும் பயிர்கள் வாழக்
கொடுத்தநீர் குறைந்து போக
வண்டிகள் சுமக்க வாரி
வழங்கிய வயல்கள் இன்று
அண்டிய உழவன் வீட்டு
அடுப்புபோல் காய்ந்த தம்மா!

கயலினம் சுமந்த ஓடை
கழிவுநீர் சுமக்க லாச்சு
வயல்களில் மேய்ந்த மாடு
வண்டியில் ஏற லாச்சு
கரைமரம் நிறைந்த ஏரி
கட்டட மனைகள் ஆச்சு
உரைதிணை மருதம் இங்கு
உருத்தெரி யாமல் போச்சு!

நெற்களம் மட்டைப் பந்தின்
நேர்திடல் ஆன திங்கே
புற்களைச் சுமந்த பூமி
புதுப்புது நோய்க்குள் ளானாள்
சொற்களால் பெருமை யன்றி
சோகமே உழவன் சொத்து
தற்கொலை மூன்று போகம்
தவறாமல் விளையு தம்மா!

விலங்குகள் பறவை மற்றும்
விரிபுவி உயிர்கள் எல்லாம்
தொலைந்துதான் போன தன்றி
தோற்றது உழவர் வாழ்வும்
மலர்ந்திடும் அணு ஒப் பந்தம்
மாறிடும் நூறு ஆட்சி
உலர்ந்திடும் மருதம் கண்டு
உணர்ச்சி நீ கொள்வாய் தோழா!

தேனுஜா




## சாத்தானின் மறை விடம்

சில மரணம்
உன்னைப் போல்
மிக அழகானது

பல மரணம்
என்னைப் போல்
மிக இழிவானது

உன் மரணம்
எப்படி என்பது
எனக்குத் தெரியும்

என் மரணம்
எப்படி என்பது
அவனுக்குத் தான்
தெரியும்

தெரிந்தால் தான்
அவன் கடவுள்
இல்லையெனில்
எனக்குள்இருப்பது
சாத்தான்.

சா. ரமேஸ்குமார்,
மருதனார்மடம்




# இராசி பலன்

**26.02.2014 -04.03.2014**

### மேஷம்
**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

ஆரோக்கிய உடல் நலம் அமைந்து, பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். அக்கம்,பக்கத்தவரின் நட்பு, உதவி கிடைத்து மனதில் பெருமிதம் கொள்வீர்கள் இயன்ற அளவு சமூகப்பணியில் நாட்டம் ஏற்படும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு முறை பின்பற்ற வேண்டும். புத்திரர் படிப்பு, தனித்திறன் வளர்ப்பில் முன்னேற்றம் காண்பர். நீண்ட கால பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் கவனக்குறைவான பேச்சு, செயலினால் மனக்கஷ்டம் ஏற்படலாம். சகிப்புத்தன்மையினால் குடும்பத்தில் ஒற்றுமை உருவாகும்.

### ரிஷபம்
**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

புதிதாக தொடங்கும் நற்செயல்கள், ஒருமுகத்தன்மையின் பலனாக முழு அளவில் நிறைவேறும். கடந்த நாட்களில் விலகிச் சென்ற நண்பர், உறவினர் உங்களின் நல்ல குணம் உணர்ந்து நட்புப் பாராட்டுவர். புத்திரரின் சேர்க்கை சகவாசம் [illegible] அறிவுரை சொல்வதால். படிப்பில் உரிய கவனம் ஏற்படும். இல்லறத்துணை உங்களின் கருத்துக்களை [illegible] குடும்ப நலம் பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, தாராள [illegible] கிடைக்கும்.

### மிதுனம்
**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றி, முன்னர் பெற வேண்டிய நன்மைகளை எளிதாக பெறுவீர்கள். வீட்டிற்கு தகுந்த பாதுகாப்பு முறையும், வாகனத்தில் மித வேகமும் பின்பற்றுவது அவசியம். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை குடும்பத்தில் அன்பும், அமைதியும் நிலைத்திட பொறுமையுடன் பணிகளை மேற்கொள்வார். பெண்கள் குடும்பத்தின் பணவரவுக்கு ஏற்ப, செலவுகளுக்கு திட்டமிடுவர். தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து, தரத்தேர்ச்சியில் முன்னேற்றம் காண்பர்.

### கடகம்
**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

தன்னிடம் பழகுபவர்களின் மனஉணர்வு மதித்து பேசுவதால் மட்டுமே நட்பு, நற்பெயரை பாதுகாக்கலாம். இஷ்ட தெய்வ அருள் பலத்துடன், முருகப் பெருமானின் நல்லருளும் துணைநின்று, முக்கியமான செயல் ஒன்று இனிதாக நிறைவேறும். வேலைவாய்ப்பு, திருப்திகரமான வகையில் கிடைக்கும். இல்லறத் துணையின் மனதில், உங்கள் மீதான நம்பிக்கைக்கு குறையேதும் வராமல் நடந்து கொள்வது, ஒற்றுமையை பலப்படுத்தும். அரசு தொடர்பான சலுகை பெறுவதில், தாமதம் உருவாகலாம். பெண்கள் கணவரின் சம்மதமின்றி, உறவினர் பெண்ணிடம் பணப்பரிவர்த்தனை கூடாது.

### சிம்மம்
**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

குரு, சனி, ராகு கூடுதல் நற்பலன் தருகின்றனர். முக்கியமான செயல் நிறைவேறி, ஆதாய பணவரவை பெற்றுத்தரும். பணச்சேமிப்பு அதிகரிக்கும். புத்திரர் அறிவுத்திறன் வளர்ந்து, படிப்பில் சிறப்பிடம் பெறுவர். பொறாமை குணம் உள்ளவர் பார்வையில் தெரியும்படி, அதிக அளவு பணம் செலவு செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிய தேக்க நிலையை தாமதமின்றி சரிசெய்வது, உரியபலன் பெற உதவும். பணியாளர்கள், எளியமுயற்சியினால் சலுகைப்பயன் பெறலாம்.

### கன்னி
**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

சிலரது பரிகாசம் நிறைந்த பேச்சினால், மனவருத்தம் கொள்வீர்கள். உடன்பிறந்தவரின் தகுதிக்கேற்ற பணியை தந்து நிறைவேற்றுவீர்கள். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயலை, பலவீனப்படுத்தும் வகையில் குறை சொல்ல வேண்டாம். உடல்நல ஆரோக்கியம் பலமுடன் இருக்கும். விவகாரங்களில் சுமுகத் தீர்வு பெற, முக்கியஸ்தர் உதவுவார். இல்லறத்துணையின் அன்பான பேச்சு, மனதில் உற்சாகம் தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என்கிற நடைமுறை சிறப்பான பலனைத்தரும்.

### துலாம்
**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

மனதில் இருந்த குழப்பமான எண்ணங்கள் விலகி நம்பிக்கை, புத்துணர்வு பெறுவீர்கள். உழைப்புக்கேற்ற பலன் உன்னதமாக வந்து சேரும். குடும்பத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். புத்திரரின் உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்க, ஆலோசனை சொல்வீர்கள். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்கள், உங்களுக்கு தேவையான உதவி வழங்குவர். தொழில், வியாபாரம் செழிக்க இயன்ற அளவில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள்.

### விருச்சிகம்
**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நண்பர் சொல்லும் சிறந்த ஆலோனையை பின்பற்றுவதால், சிரமமான செயலிலும், வியத்தகு நன்மை கிடைக்கும். பணவரவுக்கேற்ப செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். புத்திரரை பாராட்டுவது, கண்டிப்பதில் மிகுந்த நிதானம் வேண்டும். எதிர்ப்பாளரால் உருவாகிற தொந்தரவு பலமிழந்து போகும். சுக்கிரனின் மூன்றாம் இட அமர்வு, குடும்பத்தில் மகிழ்ச்சி சுப மங்கல நிகழ்வை உருவாக்கும். தொழிலில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். புதியவர்களின் ஆதரவினால் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு மற்றும் சலுகை கிடைக்கும்.

### தனுசு
**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உடல் நல ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிலர், புதிய வாகனம், வீடு வாங்க நல்யோகம் உண்டு. புத்திரரின் உடல் நலம் ஆரோக்கியம் பெற, சத்து நிறைந்த உணவு உண்ணத் தருவீர்கள். அறிமுகமான பெண் ஒருவர், சில நன்மை உங்களுக்கு கிடைக்க காரணமாக செயல்படுவார். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். இயந்திர தொழிற்சாலை பணியாளர், பாதுகாப்பு நடைமுறை கவனமாக பின்பற்ற வேண்டும்.

### மகரம்
**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

இளைய சகோதரரின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நம்பிக்கையை அதிகரிக்கும். சொத்து பராமரிப்பில் நம்பகமானவரை பணியமர்த்துவது சிரமம் தவிர்க்க உதவும். புத்திரர், உங்கள் சொல்கேட்டு நடந்து கொள்வர். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம், தேவையற்ற வாக்குவாதம் தவிர்க்கவும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன், குடும்ப நலன் பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கால அவகாசம் தேவைப்படும். அரசியல்வாதிகள், சமரசபேச்சு வார்த்தையில் இருதரப்பு நியாயம் உணர்ந்து பேசுவது நல்லது.

### கும்பம்
**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

எளிய முயற்சியினால் செயல்களை திறம்பட நிறைவேற்றுவீர்கள். பணவரவு அதிகம் பெற உருவாகிற வாய்ப்புக்களை தவறாமல் பயன்படுத்துவீர்கள். புத்திரர் நல்ல விதமாக படித்து, குடும்பத்திற்கு பெருமை தேடித் தருவர். நிர்பந்த பணக்கடனில், ஒரு பகுதி செலுத்துவீர்கள். தொழில், வியாபார நிலவரங்களுக்கு ஏற்ப, சிலமாற்றம் பின்பற்றுவீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். குடும்ப பெண்கள், சேமிப்பு பணத்தை, அத்தியாவசிய செலவுக்கு பயன்படுத்துவர்.

### மீனம்
**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

இளைய சகோதரரின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நம்பிக்கையை அதிகரிக்கும். சொத்து பராமரிப்பில் நம்பகமானவரை பணியமர்த்துவது சிரமம் தவிர்க்க உதவும். புத்திரர், உங்கள் சொல்கேட்டு நடந்து கொள்வர். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம், தேவையற்ற வாக்குவாதம் தவிர்க்கவும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன், குடும்ப நலன் பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கால அவகாசம் தேவைப்படும். அரசியல்வாதிகள், சமரசபேச்சு வார்த்தையில் இருதரப்பு நியாயம் உணர்ந்து பேசுவது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அது ஓர் அழகிய நிலாக்காலம்

ஒளிப்படம் : பவி

## 3 கிராமங்களின் கதை

### நிலம் 05

மகாலிங்கம் பத்மநாபன்

என்னதான் மூன்று கிராமங்களினதும் கூட்டிணைப்பு உடைந்தபோதும் அவர்கள் ஒன்றுகூடும் ஒருநாள் இருந்தது. பொறிக்கடவை அம்மன் மட்டும் இந்த மக்களை இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். இந்தப்பகுதி மக்கள் தீபாவளி, புதுவருடத்தை விட அம்மனின் பங்குனி வேள்வியையே பிரதானமாகக் கொண்டாடுவர். புத்தாடை அணிந்து காவடி, பாற்செம்பு எடுத்து மிகக் குதூகலமாகப் பங்கேற்பர். உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பங்குனி வேள்விக்கு ஊருக்கு வந்து விடுவார்கள். அந்தளவுக்கு பொறிக்கடவை அம்மன் ஆலயத்திருவிழா அவர்களுக்கு முக்கியம். அந்த வேள்வியில் பங்கேற்காவிட்டால் வாழ்க்கையில் பெரும்பகுதியை இழந்தது போல உணர்வார்கள். எனவே இந்த வலியில் இருந்து தப்பவும் சிதறிக்கிடக்கும் தம் உறவுகளை ஒருநாளாவது ஒரே இடத்தில் சந்தித்துச் சொந்தம் கொண்டாடவும் அவர்களுக்கு இருந்த ஒரே ஒரு சந்தர்ப்பம் பொறிக்கடவை அம்மன் வேள்விதான்.

**கல்வி**

பெரிய பரந்தன் மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் பரந்தன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 1925ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தன், செருக்கன், நீவில், 05ஆம் வாய்க்கால், பெரிய பரந்தன் காடு, பரந்தன் சந்தி முதலிய இடங்களிலிருந்து வந்த மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கியது. 1954ஆம் ஆண்டு பரந்தன் இந்து மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்படும் வரை இந்தப் பாடசாலையேகுறித்த பகுதி மாணவர்களின் கல்வியை வளர்த்தது.

**பெரும் புலப்பெயர்வு**

கனகாம்பிகைக் குளம் என்னும் இடத்தில் அரை ஏக்கர் காணியை அரசாங்கம் வழங்கும்போது பெரிய பரந்தன் கமக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் பெரிய பரந்தன் மக்கள் பெருமளவில் கனகாம்பிகைக் குளத்தில் குடியேறினர். இப்போது குஞ்சுப்பரந்தன், பெரிய பரந்தனில் குறைந்த எண்ணிக்கையானவர்களே வாழ்கின்றனர். குஞ்சுப்பரந்தன் மக்களில் பலர் மீண்டும் மீசாலை, சாவகச்சேரி போன்ற இடங்களில் மீளக் குடியேறிவிட்டனர். இவர்களும் நீவில் கமக்காரர்களும் காலபோகச் செய்கைக்கு மட்டுமே வந்து போகின்றனர். செருக்கன் மக்கள் மீட்சியின்றி கவனிப்பாரற்று செருக்கன் பிள்ளையாரை மட்டும் நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

பெரிய பரந்தனில் தற்போது வசிக்கும் மக்களில் மூன்று குடும்பத்தவரை தவிர ஏனையவர்கள் வீட்டுத்திட்டங்கள் பெற்று, சுயமுயற்சியாலும் அரசின் ஆதரவாலும் வீடு கட்டி வாழ்கின்றனர். பரந்தன் அ.த.க பாடசாலையும் புதிய கட்டடங்களுடன் சிறப்பாக இயங்குகின்றது. காஞ்சிபுரம் என்னும் கிராமம் பெரிய பரந்தன் கிராமத்துக்கு மிக அருகே உள்ளது. நீலனாறு இரு கிராமங்களையும் பிரிக்கின்றது. நீலன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்பட்டால் காஞ்சிபுரம் மாணவர்கள் நூறு பேர் வரை பரந்தன் அ.த.க பாடசாலைக்கு வந்து தமது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யலாம். எண்பத்தைந்து குடும்பங்களுக்கு மேலே வாழும் காஞ்சிபுரம் கிராமத்துக்கு தனியான ஒரு பாடசாலை இல்லை. சுமார் ஐந்து கிலோமீற்றர் நடந்து சென்று கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலேயே கல்வி கற்கின்றனர்.

**கலை**

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தனில் காத்தான் சிந்து நடைக் கூத்து, கண்ணகி கோவலன் கூத்து என்பன சிறந்து விளங்கின. பரந்தன் அ.த.க பாடசாலை மாணவர்கள் பலமுறை கோட்ட மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலாவதாக வந்து தமது பாரம்பரியத்தை நிலை நாட்டினர்.


**சமய நம்பிக்கை**

பொறிக்கடவை அம்மன் கோவிலைத் தவிர பெரிய பரந்தனில் பள்ளமோட்டைப் பிள்ளையார், குழந்தையன் மோட்டைப் பிள்ளையார், பாடசாலையடிப் பிள்ளையார் என மூன்று பிள்ளையார் கோவில்கள் சிறிய அளவில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன. குஞ்சுப்பரந்தனில் ஒன்று, செருக்கனில் ஒன்று எனப் பிள்ளையார் கோவில்கள் உண்டு. இவை தவிர காட்டுக் கரைகளில் காளி கோவில், வைரவர், வீரபத்திரர், ஐயன் கோவில்கள் அமைக்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி வழிபாடும் பொங்கலும் மடையும் இடம்பெறுகின்றன. இந்தக் கோவில்களில் பறைமேளம் அடித்தலும், கலை ஆடுதலும் இடம்பெறுகின்றன. நோய்களுக்கு கலையாடி திருநீறு போடும் வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது.

**(இன்னும் நிலம் விரியும்)**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது கதிர்வேலன் காதல்

உதயநிதி ஸ்டாலின், கதாநாயகனாக நடித்து வெளிவந்திருக்கும் திரைப்படம்தான் கதிர்வேலன் காதல்!

கதைப்படி, உதயநிதி, ஐந்தாம் வகுப்பு படிக்கும் காலத்தில் இருந்தே தீவிர ஆஞ்சநேயர் பக்தர்! பெண் வாடையே பிடிக்காதவர். ஆனால் அவரது கூட்டாளி சந்தானத்திற்கு காதல். பெண்கள் என்றால் கொள்ளை இஷ்டம்! ஆனால் உதயநிதியின் ஆஞ்சநேய அவதாரங்களால் தன் காதலிகளை இழக்கும் சந்தானம், உதயநிதியின் தொடர்பே வேண்டாம் என கோயமுத்தூர் பக்கம் நவீனமாக கொழுப்பை குறைக்கும் லேகியம் விற்க போய்விடுகிறார். அதே நேரம் உதயநிதியின் உடன்பிறந்த அக்கா சாயாசிங்கும், கோயமுத்துக்காரர் பரத்ரெட்டியை காதலித்து கரம்பிடித்து கோவையில் குடியேறுகின்றார்.

கணவனுடன் சின்ன ஊடலில் ஊருக்கு வந்திருக்கும் சாயா சிங் விடயத்தில், காதல் திருமணம் என்பதால் உதயநிதியின் தந்தை நரேன் பட்டுக்கொள்ளாமல் இருக்க, அக்காவை மாமாவுடன் சேர்த்து வைக்க வியாபார விடயமாக சேலம் போவதாக சொல்லிவிட்டு கோயமுத்தூர் போகின்றார் உதயநிதி!

அங்கு தன் அக்கா வீட்டு, எதிர்வீட்டு தேவதை நயன்தாராவை பார்த்து ஆஞ்சநேயர் பக்தர் அவதாரத்தை உதறிதள்ளும் உதயநிதி, நண்பர் சந்தானத்துடன் சேர்ந்து கொண்டு அம்மணியை சுற்றுகிறார். பின் காதலிலும் விழுகிறார். அப்புறமென்ன.? நயன்தாராவின் நண்பர் என்று சொல்லிக்கொண்டு அவரை அடையத்துடிக்கும் நட்பு துரோகியின் முகத்திரையை நயன்தாராவுக்கு கிழித்துகாட்டி அவரிடம் நல்லபெயர் எடுக்கும் உதயநிதி மீது நயன்தாராவுக்கும் காதல் வருவதும், அந்த காதலை இருவீட்டு பெற்றோரும் ஏற்று கொண்டனரா? இல்லையா.? என்பதுதான் வித்தியாசமும், விறுவிறுப்புமான இது கதிர்வேலன் காதல் படத்தின் மீதிக் கதை.

கதிர்வேலனாக உதயநிதி ஸ்டாலின் கூலிங்கிளாஸ்" டன் கலகலப்பாக இருக்கின்றார். நயன்தாராவுடனான காதல் காட்சிகளைக் காட்டிலும் அப்பா நரேன், அக்கா சாயாசிங், மாமா பரத்ரெட்டி, தோஸ்த் சந்தானம் இவர்களுடைய இணைப்புக் காட்சிகளில் நன்றாகவே நடித்திருக்கிறார் உதயநிதி! நயன்தாரா - உதயநிதி காதல் காட்சிகளில் உதயநிதியின் நடிப்பு அசத்தியிருக்கிறது.

நயன்தாரா வழக்கம்போலவே பவித்ரா எனும் அழகு பொம்மையாக வந்து முதுமை நிரம்பியவர்களையும் உசுப்பேற்றுகிறார்.

மயில்வாகனன் சந்தானம் தான் கதிர்வேலனின் நகைச்சுவை. எதுக்கு நீ சண்டைக்கு போற பாக்யராஜ் மாதிரி வாட்ச், மோதிரத்தை எல்லாம் கழட்டி வக்கிற...? என கேட்பதில் தொடங்கி எல்லா பெண்களும், சூர்யா மாதிரி பையன் வேணும் தான் பார்ப்பாங்க... ஆனால் கடைசியில ஏரியா பையனுக்கு தான் உஷாராவாங்க... என இந்தக்காலத்து இளம் பெண்களை வம்புக்கு இழுப்பது வரை... காட்சிகளுக்கு தியேட்டரை அதிர விடுகிறார்.

நரேன், ஜெயப்பிரகாஷ், சுந்தர், பரத், முருகதாஸ், சரண்யா பொன்வண்ணன், சாயாசிங், வனிதா, கலாகல்யாணி, நீது நீலாம்பரன் எல்லோரும் தங்கள் பாத்திரம் அறிந்து பளிச்சிட்டிருக்கின்றனர்! பாலசுப்ரமணியத்தின் ஒளிப்பதிவு, ஹாரிஸ் ஜெயராஜின் இசையும் கதிர்வேலன் காதலை மேலும் பலமாக்குகின்றன.

அடிக்கடி உதயநிதி ஐந்தாம் வகுப்பில் இருந்து ஆஞ்சநேயர் பக்தர் என்பதும், சாயாசிங் ஊரிலிருந்து, உதயநிதிக்கு அடிக்கடி போனில் எதிர்வீட்டுப் பெண்ணை பார்த்து டாத... என்பது, உள்ளிட்ட ஒருசில குறைகள் இருந்தாலும், எஸ்.ஆர்.பிரபாகரன்-'ின் இயக்கத்தில் கதிர்வேலன் காதல் - ...மாடியிருக்கிறது.



# ஒரு ஊர்ல ரெண்டு ராஜா

ஜெயம்கொண்டான், கண்டேன் காதலை, சேட்டை ஆகிய படங்களை இயக்கியவர் ஆர்.கண்ணன்.

இவர் தற்போது ஒரு ஊர்ல ரெண்டு ராஜா என்ற படத்தை இயக்குகிறார். இந்த படத்தில் விமல்- சூரி நடிக்கின்றனர். கதாநாயகியாக பிரியா ஆனந்த் நடிக்கிறார்.

டி.இமானின் இசையில் உருவாகும் இப்படத்தை, குளோபல் இன்போடெயின்ட்மெண்ட் நிறுவனம் மூலம் மைக்கேல் ராயப்பன் தயாரிக்கிறார். தூத்துக்குடியில் இருந்து சென்னை நோக்கி வரும் ரயிலில் நடக்கும் சம்பவங்களை வைத்து படத்தின் கதையை உருவாக்கியுள்ளார் கண்ணன்.

முதல் பாதி வரை ரயிலிலும், இரண்டாம் பாதி கார் பயணம் என அதிரடி நகைச்சுவை கலந்த பொழுதுபோக்குப் படமாக உருவாகிறதாம்.

இதன் படப்பிடிப்பு சென்னை ஏ.வி.எம். ஸ்டுடியோவில் தொடங்கியது. தொடக்க விழாவில் இயக்குனர் கண்ணன், நடிகர் சூரி, தயாரிப்பாளர் மைக்கேல் ராயப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இப்படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இந்தப் படத்தை வரும் ஜூலையில் வெளியிடதிட்டமிட்டுள்ளனர்.






## உதவி இயக்குனராக ஜீவா

சினிமாவில் காலடி எடுத்துவைத்த பலர் இன்று இயக்குநர்களாகவும் உதவி இயக்குனர்களாகவும் உருவாகிவருகின்றார்கள். இந்த நிலையில், ஜீவாவும் இப்போது யான் படத்தில் உதவி இயக்குனராக பணியாற்றியிருக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு மொராக்கோவில் நடைபெற்றபோது உதவி இயக்குநர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், தானே மற்ற உதவி இயக்குனர்களுக்கு இணையாக அத்தனை வேலைகளையும் செய்தாராம்.

## விவேக்குக்கு பிச்சைபோட்ட நியூயோர்க் வாசிக்ள்

சந்திரா படத்தின் படப்பிடிப்புகள் நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்றன. இந்தப் படத்தில் நீண்ட நாள்களுக்குப் பின் ஸ்ரேயா கதாநாயகியாக நடித்திருக்கின்றார். விவேக் பிச்சையெடுப்பது போன்ற ஒரு காட்சி இதன்போது படமாக்கப்பட்டதாம்.

அப்போது விவேக்கை உண்மையான பிச்சைக் காரரா கவே நினைத்துவிட்ட நியூயோர்க் வாசிகள் அவருக்கு பிச்சை போட்டுவிட்டு சென்றனராம்.






## திருமணத்தின் பின்பும் நஸ்ரியா?



நல்லவேடமாக இருந்தால் திருமணத்தின் பின்பும் நடிப்பேன் எனக் குஷியாகக் கூறுகின்றார் நஸ்ரியா. தற்போது வருங்கால கணவர் பஹத்துடன் ஒரு மலையாள படத்திலும், இரண்டு தமிழ் படங்களிலும் நடித்து வருகிறார். மலையாளத்தில் உஸ்தாத் ஹோட்டல் என்ற பெயரில் வெளியான படம், தற்போது தமிழில் தலப்பாகட்டு என்ற பெயரில், மீள் உருவாக்கம் செய்யப்படுகின்றது. இந்த படத்தில் நாயகியாக நடிக்க நஸ்ரியாவிடம் கேட்டபோது, இதன் மலையாள பதிப்பில் நடித்திருந்த நித்யா மேனனுக்கு மிகச் சிறிய வேடமாயிற்றே என்று இழுத்தாராம். அதையடுத்து, மலையாளத்தை விட தமிழில் ஹீரோயின் வேடத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவரை ஒப்பந்தம் செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜித்துடன் அனுஷ்கா ?



அனுஷ்கா

அஜித்தின் படங்களில் நடிக்கும் வாய்ப்பை இழந்து வருகின்றார் அனுஷ்கா. ஏற்கனவே வீரம் படத்தில் அஜித்துடன் நடிக்க அனுஷ்காவைத்தான் முதலில் தேர்ந்தெடுத்தனர். அவ்வேளை மற்றைய படங்களின் படப்பிடிப்புகளுக்குச் சென்றாதல் அனுஷ்கா நடிக்க முடியவில்லை. இப்போதும் அதே சிக்கல் வந்திருக்கிறது.

கௌதம் மேனன் படத்தில் அஜித்திற்கு ஜோடியாக அனுஷ்கா நடிக்கவிருப்பதாக தகவல் வெளியானது. ஆனால், அவரோ நேரம் ஒதுக்க முடியாத நிலையில் இருக்கிறாராம்.

ருத்ரம்மா தேவி, பாகுபாலி படங்களில் பிஸியாக இருப்பதோடு, சண்டைப் பயிற்சியில் கவனம் செலுத்துவதால் அனுஷ்கா இன்னும் கொஞ்சம் முதிர்ச்சியாகத் தெரிகிறாராம்.

ஆனால், அஜித் படத்தில் கொஞ்சம் இளமையாகத் தெரிய வேண்டும் என்பதால் அனுஷ்கா இதில் நடிப்பாரா? கௌதம் மேனன் அதுவரைக்கும் காத்திருப்பாரா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

## கரகாட்டம் பயிலும் வரலட்சுமி

பெயர் சூட்டப்படாத பாலாவின் அடுத்த படம் கரகாட்டத்துடன் சம்பந்தப்பட்டது. கதாநாயகன் சசிகுமார் . இளையராஜா இசை, செழியன் ஒளிப்பதிவு.

படத்துக்காக 12 பாடல்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார் இளையராஜா.

மார்ச் மாதம் முதல் தஞ்சை பகுதியில் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

படத்தின் கதாநாயகியாக பலரது பெயர் பரிசீலிக்கப்பட்டு ஸ்ரேயாவும், வரலட்சுமியும் தனித்தனியாக அழைக்கப்பட்டு பரீட்சார்த்த படப்பிடிப்பு நடத்தப்பட்டபோது ஸ்ரேயா தேர்வு செய்யப்படுவார் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தனர். பாலா வரலட்சுமியை கரகாட்டகாரி என்று அடையாளம் காட்டிவிட்டார்.

படத்துக்கு தேர்வு செய்யப்பட்டமை குறித்து வரலட்சுமி குறிப்பிடுகையில், என்னை பரீட்சார்த்த படப்பிடிப்புக்கு அழைத்திருந்தார்கள். பரீட்சை முடிந்து வெளியில வந்ததுமே, 'நீதான் கரகாட்டக்காரி' என்று பாலா சொன்னார். பாலா படத்தில நடிக்கிறது என்னுடைய கனவாக இருந்தது.

அது இவ்வளவு விரைவாக நிறைவேறும் என்று நினைக்கவில்லை. அவருடைய படத்துக்காக என்ன வேணுமானாலும் செய்வேன்.

கிளாசிக்கல், ஹிப்ஹாப், சல்சான்னு விதவித நடனங்களை கற்றுக்கொண்ட நான் இப்போது பாலா படத்துக்காக கரகாட்டம் கற்றுக் கொள்ளப் போகிறேன் என்கிறார் வரலட்சுமி.



வரலக்ஷ்மி



நஸ்ரியா



டாப்சி

ஐஸ்வர்யா தனுஷ் இயக்கி வரும், வை ராஜா வை படத்தில், கௌதம் கார்த்திக்- ப்ரியா ஆனந்த் ஜோடி சேர்ந்துள்ளனர். இப்படத்துக்கு ஆடுகளம் பட நாயகி டாப்சியை கேட்டபோது அவரும் தலையசைத்துவிட்டாராம். மொத்தக் கதையையும் கேட்ட டாப்சி தனக்குக் கிடைக்கும் பாத்திரம் சிறியதாக இருந்ததால், தயங்கினார். பின், ஐஸ்வர்யாவின் நட்புக்காக, நடிக்க சம்மதித்துவிட்டார். டாப்சி இடம் பெறும் காட்சிகள், சிங்கப்பூரில், ஏழு நட்சத்திர சொகுசு கப்பலில் படமாக்கப்பட உள்ளன.

## சிம்புவுக்கு நயன் வாழ்த்து



இது நம்ம ஆளு படத்தில் சிம்புவும் நயன்தாரவும் மீண்டும் அந்நியோன்னியமாக நடித்துவருகின்றார்கள் இந்தப் படத்தில் இருவரின் நடிப்பையும் பார்த்து திரையுலகமே மெய்சிலிர்த்திருக்கிறதாம்.

மற்றைய நடிகர் - நடிகைகளைப்போல், படப்பிடிப்பு முடிந்ததும் தலைமறைவாகிக் கொள்ளாமல் படப்பிடிப்பு தளத்திலேயே, அமர்ந்து, மனம் விட்டு பேசிக் கொண்டிருக்கின்றனர், இருவரும். மேலும், சிம்புவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பங்கேற்ற, நயன்தாரா, அவருக்கு வாழ்த்து தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடந்த வாரத் தொடர்ச்சி)


# ஆண்களை அலையவைத்தல்

நீங்கள் இணையத்தில் அரட்டையடிப்பவரா? அப்படியான பழக்கம் இருந்தால் இன்னும் நல்லது. ஒரு எழுந்தமானத்துக்கு ஆண் நண்பர் ஒருவருக்கு நீங்களாகவே 'ஹாய்', 'சாப்பிட்டியாடா?' என்று கேளுங்கள். விழுந்தடித்துக்கொண்டு எல்லோரும் உங்கள் சுகதுக்கங்களைக் கேட்கிற சாட்டில் வழியத் தொடங்குவார்கள். ஒரே நேரத்தில் நிறைய ஆண்நண்பர்களை அலைய வைக்க முகப்புத்தக அரட்டை இன்னும் உதவியாக இருக்கும்.

ஒரு கட்டத்தில் உங்கள் ஆண் நண்பர் தொலைபேசி இலக்கத்தைக் கேட்பார். கேட்டவுடன் கொடுத்தால் உங்கள் மதிப்பு என்ன ஆவது? "நான் ஒருவருக்குக் கொடுப்பதில்லை. ஆனால் உனக்குத் தரலாமா என்று யோசிக்கிறேன்." என்று பிடிகொடுக்காமல் சொல்லுங்கள். ஒருவருக்குமே தொலைபேசி இலக்கம் கொடுக்காவிட்டால் 'தனக்குத்தானே கோல்பண்ணி நீங்கள் கதைக்கிறீர்களா' என்றெல்லாம் அவர்கள் யோசிக்க மாட்டார்கள்.

தனக்கு மட்டும் நீங்கள் அருளும் வரமாக நினைத்து கெஞ்சத்தொடங்குவார்கள். கொஞ்ச நாளைக்கு அந்தக் கெஞ்சலைத் தொடர தொலைபேசி இலக்கத்தை தருவது போலவும் தராதது போலவும் இரண்டும் கெட்டான் நிலையில் கதையுங்கள். பின்னர் ஒருகட்டத்தில் மனமிரங்குவதுபோல கொடுத்துவிட்டு ஒரு 'மிஸ்கோல்' போடுங்கள். பின்னர் நீங்கள் நினைத்த நேரத்தில் எல்லாம் உங்கள் போனுக்கு 'ரீலோட்' வந்து குவியும்(இது உங்களுக்கு பகுதி நேர வருமானம்).

**ஒரு கட்டத்தில் உங்கள் ஆண் நண்பர் தொலைபேசி இலக்கத்தைக் கேட்பார். கேட்டவுடன் கொடுத்தால் உங்கள் மதிப்பு என்ன ஆவது? "நான் ஒருவருக்கும் கொடுப்பதில்லை. ஆனால் உனக்குத் தரலாமா என்று யோசிக்கிறேன்." என்று பிடிகொடுக்காமல் சொல்லுங்கள்.**



இப்படி உங்கள் செல்போனுக்கு 'ரீலோட்' போடச் செய்வதற்கும்சில தந்திரங்கள் இருக்கின்றன. உரையாடிக் கொண்டு இருக்கும்போதே போனைக் கட்பண்ணிவிடுங்கள். திரும்பவும் உங்கள் ஆண் நண்பர் எடுத்தால் "பலன்ஸ் முடிஞ்சுது. இரவு எஸ்.எம்.எஸ்ஸும் போடேலாது. " என்று கவலைப்படுவது போல் சொல்லுங்கள். கூவிக்கொண்டு 'ரீலோட்' உங்கள் செல்போனுக்குள் ஊடுருவும்.

சிலநேரங்களில் உங்கள் போனில் இருந்து அழைப்புகளை எடுக்க முடியாதிருப்பதாகச் செல்போனைக் கண்டபடி திட்டுங்கள். "இந்த பழைய போனை வைச்சுக்கொண்டு நான் படுற பாடு" என்று சொல்லிவையுங்கள். விடிகாலையிலேயே புதிய போனைப் பரிசளிக்க உங்கள் நண்பர் காத்திருப்பார்.

(அடுத்தவாரம் அலையவைப்போம்)

# காதலா? காமமா?



**கா**தலுக்கும் காமத்துக்குமான எல்லைக்கோடுகள் பிரிக்கப்படும் போது பெரும் சமூகப் பிரச்சினைகளும் தலைதூக்குகின்றன.

சமூக வரையறையின் கண்களால் காதல் பற்றிய புரிதலை வளர்த்துக் கொள்ளும் நபர்கள் அது முறிந்து விடும் பொழுது வாழ்க்கையே முடிந்துவிட்டதாக நினைத்து தற்கொலையை நாடுகின்றனர். அங்கு தனது உடலுக்கு நேரும் தோல்வியை உடல் கொண்டே பழிதீர்த்துக்கொள்ளும் மனநிலை ஓங்குகிறது. உறவு முறிவு என்பது வெறும் அவமானத்துக்குரிய விசயமாகக் கருதும் அளவுக்கு காதல் மிகையுணர்ச்சி நிறைந்ததாக உருவேற்றப்பட்டிருக்கிறது. திரைப் படங்கள், மற்றும் ஊடகங்கள் இதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

திருமண முறிவைக் காட்டிலும் காதல் முறிவுகள் பெரும் புனித அளவீடுகளால் அளக்கப்படுகின்றன. அதனால் காதல்முறிவால் நிகழும் தற்கொலைகளும் அதிகமாக இருக்கின்றன. (காதலுக்கான தற்கொலையும் புனிதமான ஒன்றாக இங்கு கற்பிக்கப் படுவதை வைத்து இதன் தன்மையை உணரலாம்)

மனதில் ஒருவனை நினைத்துவிட்டால் மற்றொருவனை நினைப்பதென்பது விபசாரத்துக்கு ஒப்பானது என்று மீண்டும் மீண்டும் ஓதப்படுகின்றது. இத்தகைய கருத்தியல் சிறு வயதிலேயே ஆணின் எத்தகைய வன்முறைகளையும், விதிமுறைகளையும் சகித்துக் கொள்ள வேண்டும் எனும் கருத்தை பெண்கள் மீது திணிக்கிறது. ஆண்களுக்கு இது கற்பு சார்ந்த விசயமாக இருப்பதைக் காட்டிலும்

ஆண்மை சார்ந்த பிரச்சினையாக இருக்கிறது. தற்காலத்தில் இதெல்லாம் சர்வசாதாரணமாகி விட்டது என்று சொல்வது சில மேட்டுக் குடிக் காதல்களை மட்டும் கணக்கில் கொள்வதாகும்.




# கட்டிப்பிடி காதலரை: எட்டிப்பிடி சாதனையை

**கா**தலர்கள் இருவர் 24 மணித்தியாலங்கள் 33 நிமிடங்களும் இடைவெளி இன்றி கட்டிப்பிடித்ததே இதுவரை கின்னஸ் சாதனையாக இருந்தது. ஆனால் அந்தச் சாதனையை இந்த வருடம் காதலர் தினத்தன்று முறியடிக்க ஆஸ்திரேலியாவில் உள்ள 12 காதல் ஜோடிகள் திட்டம் போட்டார்கள்.

சிட்னியில் டார்லிங் துறைமுகப் பகுதியில் விசேட அரங்கு ஒன்று அமைக்கப்பட்டு காதலர் தினத்தில் இந்தச் சாதனையை அரங்கேற்றத் தொடங்கினார்கள். 12 காதல் ஜோடிகளும் ஒரே விதமான ஆடை அணிந்து தங்கள் காதலர்களை இறுகத் தழுவியபடி அன்பை வெளிப்படுத்தினார்கள். ஆனாலும் நான்கு காதல் ஜோடிகள் கட்டிப்பிடித்துக் களைத்துப்போய் போட்டியில் இருந்து விலகிக்கொண்டார்கள். ஆனாலும் மிகுதி 7 காதல் ஜோடிகளும் 26 மணித்தியாலங்கள் 5 செக்கன்கள் தங்கள் காதலரை இறுக்கி அணைத்தபடி கின்னஸ்சாதனையை முறியடித்து புதிய கின்னஸ்சாதனைக்குச் சொந்தக்காரராகி உள்ளனர்.

நின்றபடியே தொடர்ச்சியாகக் கட்டிப்பிடித்ததால் கால்கள் விறைத்தபோதும் விடாப்பிடியாகக் கட்டி அணைத்து சாதனை புரிந்த 7 காதல் ஜோடிகளுக்கும் 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களும் வைரமோதிரமும் பரிசளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகமே உடையாதே..!

**பெ**ண்கள் தங்கள் முக அழகுக்கு செலவிடும் நேரத்தில் ஒரு சில நிமிடங்கள் கூட தங்கள் கை விரல்களுக்கோ அல்லது நகங்களுக்கோ செலவிடுவதில்லை. விரல்கள் அழகாகக் காட்சியளிக்க வேண்டுமென்றால் நகங்கள் அழகாக இருக்க வேண்டும். நகங்கள் அழகாக, நகப் பராமரிப்புக்கான சில குறிப்புகள்-

சிலருக்கு நகம் கடினத் தன்மையுடன் இருப்பதால், நகத்தை வெட்டுவதற்கு கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் குளித்தவுடன் நகம் வெட்டினால், நகம் ஈரத் தன்மையுடன் இருப்பதால், எளிதாக வெட்ட வரும். அதே போல், தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம்.

நகங்கள் அடிக்கடி உடைந்து போகிறவர்கள், சிறிதளவு பேபி ஒயிலில் நகங்களை மூழ்கும் படி வைத்தால், நகங்கள் உறுதியாகும்.

நெய்ல் பொலீஷ் ரிமூவரை அடிக்கடி பயன்படுத்துவது நகத்திற்கு தீங்கு விளைவிக்கும். எனவே, அவற்றை அடிக்கடி பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நெய்ல் பொலீஷ் ரிமூவருடன், சிறிது கிளிசரின் கலந்து பயன்படுத்துவது நல்லது.

தண்ணீரை மிதமாக சூடாக்கி, சிறிது உப்பு கலந்து, அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

தினமும் நெய்ல் பொலீஷ் உபயோகிப்பதால் நகங்களின் நிறம் மங்கி காணப்படும். எனவே வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நால்கள் நெய்ல் பொலீஷ் உபயோகிக்காமல், இருப்பது நல்லது.

ஈரமாக இருக்கும் போது ஷேப் செய்தால், நகங்கள் உடைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நகங்கள் ஈரமாக இருக்கும்போது ஷேப் செய்வதை தவிருங்கள்.

கிளிசரின் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து, அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும்..

மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்து அதை வைத்து நகங்களை தேய்த்து சுத்தப்படுத்தினால், நகங்களில், காணப்படும் அழுக்குகள் நீங்கி நகங்கள் பளபளப்பாகும்.


நகங்கள் உறுதியற்று உடைவதற்கு இரும்பு மற்றும் கல்சியம் போன்ற சத்துக்குறைபாடுகளே காரணம். எனவே நகங்கள் ஆரோக்கியமாக வளர ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும்.

**இ**ப்போதெல்லாம் பெண்கள் பலவாறு நவநாகரிகமாக மாறிவருகிறார்கள் என்பது எல்லோரும் சொல்லும் ஒரு கூற்றுத்தான்.அது என்ன நவநாகரிகம் ?

ஆடைகளைத் தாம் விரும்பியபடி அலங்கோலமாக அணிவது , ஒரு கூட்டமாகச் சேர்ந்துகொண்டு ஊரெல்லாம் சுற்றுவது என்று ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போகிறார்கள் பெரியவர்கள்.ஆண்களுக்கும் இது பொருந்துமாயினும் பெண்களின் நிலைமையைத்தான் சமூகம் அதிகம் நோக்குகிறது.

இவ்வாறு நாங்கள் நவநாகரிக உலகில் வாழ்கின்றோம் என்று வெளியே காட்டிக்கொள்ளும் பெண்கள் தங்கள் மனதில் சீரற்ற எண்ணங்களைச் சுமப்பது சரிதானா? வெளிப்பார்வைக்கு மட்டும் கவர்ச்சியாக இருந்துகொண்டு மனதின் அடியில் அசிங்கமான எண்ணங்களுக்கு பாத்திகட்டி நீர் பாய்ச்சலாமா சகோதரிகளே?

அண்மையில் கூட ஆண்களுக்கு நாங்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கமுயன்றிருந்தார்கள் இரு பெண்கள்.நாம் அறிந்த செய்தி தான்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு முன்னேயிருந்த கடையொன்றுக்குச் சென்ற இரு பெண்கள் கடையின் உரிமையாளர் உள்ளே சென்ற சமயம் பார்த்து சோடாப்போத்தல் இரண்டை எடுதது ஸ்கூட்டியின் இருக்கைக்கு கீழே மறைத்துவிட்டு செல்ல முயன்றிருக்கிறார்கள்.ஆனால் அதை ஒருவர் உரிமையாளருக்கு



## ஏமாற்றாதே...ஏமாறாதே!!

தெரிவித்ததையடுத்து அந்தச்செயல் அம்பலததிற்கு வந்து அவர்கள் கூனிக்குறுகி கூட்டத்திலிருந்த வெளியேறினர்.

இப்படியொரு கேவலமான எண்ணம் எதற்கு சகோதரிகளே? உண்மையின் முழுஉருவம் தாய்மை.தாய்மையின் ஒருவடிவம் தான் பெண்மை.பின் எதற்காக இத்தகைய சீரற்ற எண்ணங்கள்?சமூகத்தின் நச்சுக்களைகளை களையெடுக்கவேண்டிய நேரம் நாமே அதற்கு இரையாக மாறிவிடக்கூடாது.ஒரு நிமிடம் சிந்தியுங்கள் சகோதரிகளே!

# சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு..!

பகுதி-03




* **நேரத்தை எந்தக்காரணத்துக்காகவும் வீணாகச் செலவு செய்யாதீர்கள்.**

இழந்து போன நேரத்தை எவ்வளவு தான் கடுமையாக முயன்றாலும் திரும்பப் பெறமுடியாது.பொருத்தமான நேரத்தில் பொருத்தமான செயற்பாடுகளைத் தெரிவுசெய்வதும் காலத்தோடு பொருத்தமான விடயங்களைச் செயற்படுத்துவதும் முக்கியமானது.நுண்கலைகளைக் கற்றுக்கொள்ளல், தற்காப்புக்கலைகளைக் கற்றுக்கொள்ளல் போன்றவை காலம் கடந்தும் உதவக்கூடியவை.

* **பாடசாலைப் பருவத்தில் துடிப்பாக இருங்கள்.**


துடிப்பு என்று இங்கே குறிப்பிடப்படுவது பாடசாலைப்பருவத்தில் கற்கின்ற கல்வியில் ஆர்வமாகவும் புத்தாக்கமாகவும் சிந்திக்கவேண்டும்.எப்போதும் ஏட்டுக்கல்வியில் மாத்திரம் சிந்தனையாக இருக்கக் கூடாது.நாட்டு அரசியல் விடயங்கள்,சமூக நிலைமைகள், தொழில்நுட்ப மற்றும் உலகின் இயங்குநிலைச் சக்திகள் பற்றியும் அறிகின்ற விருப்பத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

* **ஏனையோரின் கலாசார விடயங்களை மதியுங்கள்**

ஏங்களுடைய கலாசாரம் மட்டுமன்றி மற்றைய குழுவினருடைய பண்பாட்டு கலாசார விழுமியங்களைப் பற்றி அறிந்துகொள்வதோடு அவற்றை மதிக்கவும் பழகிக்கொள்ளவேண்டும்.அவ்வாறு மற்றயவர்களினுடைய பண்பாட்டை அறிந்துகொள்வதற்காக குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக்கொள்வது நல்லது.

***உங்களுக்கு வேண்டுமானதைச் சரியாகச் செய்யுங்கள்.**

இதன் அர்த்தம் உங்களுக்கு வேண்டியளவுக்குச் சாப்பிட்டு வேண்டியளவுக்கு ஒய்வெடுத்து தேவையான அளவுக்கு வாழ்வது அல்ல.மாறாக உங்களின் நலனைப் பேண எவையெவையெல்லாம் உதவுமோ அவற்றை சரியாக விளங்கிக் கொள்ளுங்கள். அதாவது ஆரோக்கியமான உணவு,அளவான தூக்கம் போன்றவற்றை சொல்லலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீழ்ந்ததால் எழுந்தவர்கள்

## உலகையே திரும்ப வைத்த வாட்ஸ் ஆப் நிறுவுநர்களின் கதை

**பேஸ்புக் நிறுவனம் 99, 584 கோடி இந்திய ரூபா கொடுத்து வாங்கும் வாட்ஸ்ஆப் என்றால் என்னவென்று எத்தனை பேருக்கு தெரியும்?**

**இவ்வளவு பெரிய தொகையை கொடுத்து வாங்கும் அளவுக்கு வாட்ஸ்ஆப்பில் என்ன உள்ளது என்று பலரும் வியக்கின்றனர்.**

**ஃபேஸ்புக்கை கவர்ந்த வாட்ஸ்ஆப் என்றால் என்ன என்று பார்ப்போம்.**

**வாட்ஸ்ஆப்பை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மளமளவென அதிகரித்து வருவதே அதன்மீது ஃபேஸ்புக்கின் கவனம் திரும்பக் காரணம். வாட்ஸ்ஆப் மூலம் நாடு விட்டு நாட்டுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பலாம். அதுவும் கட்டணம் இல்லாமல். இது தான் இளம் தலைமுறையினரை வாட்ஸ்ஆப் பக்கம் இழுத்துள்ளது.**

**வாட்ஸ்ஆப்பை மாதத்துக்கு 450 மில்லியன் பேர் பயன்படுத்துகிறார்கள். அதாவது ருவிட்டரை விட 200 மில்லியன் பேர் கூடுதலாக வாட்ஸ்ஆப்பில் பயனாளிகளாக உள்ளனர். மேலும் தினமும் 10 லட்சம் பேர் புதிதாக வாட்ஸ்ஆப்பில் இணைந்து வருகின்றனர்.**

**செல்போன் வைத்திருப்பவர்கள் வாட்ஸ்ஆப்பை பதிவிறக்கம் செய்து அதில் தங்களின் செல்போன் எண்ணை ரைப் செய்து, குறிஞ்செய்தி மூலம் வரும் இரகசியக் குறியீட்டை இணைப்பதன் மூலம் அதைப் பயன்படுத்தலாம்.**

உக்ரைனிலிருந்து ஒன்றுமே இல்லாமல் வெறும் கையுடன் அமெரிக்காவுக்கு வந்து, தனது நண்பர் பிரையன் ஒக்டனுடன் இணைந்து 'வாட்ஸ் ஆப்பை' உருவாக்கி இன்று பேஸ்புக்கிடம் கிட்டத்தட்ட 1 இலட்சம் கோடி இந்திய ரூபாவுக்கு விற்று உலகையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ள வாட்ஸ் ஆப் நிறுவனர் ஜோன் கோம்–மின் கதை மிக உருக்கமானது.

காரணம், ஒரு காலத்தில் அவர் சாப்பாட்டுக்கே வழியில்லாமல், வறுமையுடன் வாழ்ந்து கொண்டிருந்தவர்.

உக்ரைனிலிருந்து வாழும் வழி தேடி அமெரிக்காவுக்கு வந்தவர்தான் ஜசன் கோம். மிக மிக வறுமையான வாழ்க்கையை சிறு வயதில் வாழ்ந்தவர்.தனது தாயாருடன் சாப்பாட்டுக்கான ரோக்களை வாங்குவதற்காக நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தவர் . ஆனால் இன்று இவர் உலகையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.

இவருடன், பிரையன் ஒக்டனும் சேர்ந்து இன்று உலகத்தின் முகத்தையே திருப்பிப் போட்டவர்கள் என்பது சாதனைக்குரிய செய்தியாகும்.

பேஸ்புக்குடன் தனது நிறுவனத்தை விற்பது தொடர்பான ஒப்பந்தத்தில் தானும் தனது தாயும் சிறு வயதில் வறுமையுடன் வாழ்ந்து வந்த இடத்தில் வைத்துக் கையெழுத்துப் போட்டுள்ளார் கோம்.அந்த இடத்தில்தான் தற்போது வாட்ஸ் ஆப் நிறுவனமும் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.கோமுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமைதான் 38ஆவது பிறந்த தினம். இவ்வளவு சிறு வயதில் இவர் உலக மகா கோடீஸ்வரர்கள் பட்டியலில் இணைந்துள்ளார்.

உக்ரைன் தலைநகர் கீவ் அருகே தான் இவரது வீடு இருந்தது. கோம், யூத இனத்தைச் சேர்ந்தவர் . சிறு வயதிலேயே தனது தாயாருடன் கலிபோர்னியாவுக்கு இடம் பெயர்ந்து வந்தார்.. அப்போது இவருக்கு வயது 16 தான். சோவியத் யூனியன் உடைந்த பின்னர் ஏற்பட்ட இடப்பெயர்வே கோமை அமெரிக்காவுக்கு செல்லவைத்தது.

ஆனால் கோமும், அவரது தாயாரும் மட்டுமே அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தனர். கோமின் தந்தை வரவில்லை. உக்ரைனிலிருந்து வரும்போது கோமின் தாயார், தனது மகன் பயன்படுத்திய சில பேனாக்கள், கொப்பிகள், புத்தகங்களையும் கூடவே கொண்டு வந்திருந்தார்.

கலிபோர்னியாவில் தனது மகனைப் பள்ளிக்குச் சேர்த்தபோது புதிய பேனா, கொப்பி, புத்தகங்களை வாங்க முடியாததால் தனது பழைய கொப்பி புத்தகங்களையே பயன்படுத்திக் கொண்டாராம் கோம். இவர் படிக்கும்போதே, பலசரக்குக் கடை ஒன்றில் தரையைத் துடைக்கும் வேலையில் ஈடுபட்டு சம்பாதித்தார் .பழைய புத்தகக் கடை ஒன்றை அணுகி அங்கிருந்த கொம்ப்யூட்டர்கள் தொடர்பான புத்தகங்களை வாங்கிப் படிப்பாராம் கோம். படித்து விட்டு திருப்பிக் கொடுத்து விடுவாராம். இப்படித்தான் இணைய வலையமைப்புக் குறித்து படித்துத் தேறியுள்ளார்.1997 ஆம் ஆண்டு ஒரு பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். மேலும் படிப்புச் செலவுக்காக ஒரு கொம்ப்யூட்டர் நிறுவனத்தில் பகுதி நேர வேலையும் செய்தார்.

அந்த சமயத்தில்தான் யாஹூ நிறுவனத்தில் ஒரு வேலைக்குப் போயிருந்தபோது பிரையன் ஒக்டனுடன் கோமுக்கு நட்பு ஏற்பட்டது. இருவரும் ஒரே வருடத்தில் மிகச் சிறந்த , நெருக்கமான நண்பர்களாகி விட்டனர். யாஹூ நிறுவனத்திலேயே மென்பொருள் பொறிஞராக வேலையில் சேர்ந்தார் கோம்.யாஹூ நிறுவன வேலை பிடித்துப் போனதால் படிப்பை விட்டு விட்டார் கோம். இந்த நிலையில் 2000ஆம் ஆண்டு கோமின் தாயார் புற்றுநோயால் உயிரிழந்தார். அப்போது கோமுக்கு மிகுந்த உறுதுணையாக இருந்து உதவியர் ஒக்டன்தான்.

2007 ஆம் ஆண்டு கோமும் ஒக்டனும் யாஹூ நிறுவனத்திலிருந்து விலகினர். ஒரு வருடம் சந்தோசமாக ஊர் சுற்றிப் பார்த்தனர். அதன் பின்னர்தான் இருவரும் இணைந்து வாட்ஸ் ஆப் புரட்சிக்கு வித்திட்டனர். இன்று உலக இளைய தலைமுறையின் தகவல் தெய்வமாக மாறி நிற்கின்றனர்.

இன்று கிட்டத்தட்ட 1 லட்சம் கோடி விலை கொடுத்து வாட்ஸ் ஆப் நிறுவனத்தை விலைக்கு வாங்கியுள்ள இதே பேஸ்புக் நிறுவனம் தான் அதன் இணை நிறுவுநரான பிரையன் ஒக்டனுக்கு ஒரு காலத்தில் வேலை கொடுக்க மறுத்திருந்தது.அன்று யாரை நிராகரித்ததோ இன்று அவரிடமிருந்தே, அவரது நிறுவனத்தை வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது பேஸ்புக். அன்றே ஒக்டனுக்கு வேலை கொடுத்திருந்தால் இந்த ஒரு லட்சம் கோடி நிச்சயம் பேஸ்புக்குக்கு மிச்சமாகியிருக்கும்.

இதே ஒக்டன் நான்கு வருடங்களுக்கு முன்பு பேஸ்புக் நிறுவன வாசலில் வேலை கேட்டு போய் நின்றார். ஆனால் அவருக்குக் கிடைத்த பதில்.. 'நீ வேண்டாம் போ' என்பதே.ஆனால் இன்று ஒக்டன் வீட்டு நிறுவன வாசலில் வந்து அவரது நிறுவனத்தை இரு கைகளையும் ஏந்தி வாங்கியுள்ளது பேஸ்புக். இதுதான் வாழ்க்கை.

பேஸ்புக்கிடம் வேலை கேட்டுப் போய் அவர்கள் நிராகரித்தவுடன் அதை ருவிட்டரில் பதிவிட்டார் ஒக்டன். அதில், 'என்னை பேஸ்புக் நிராகரித்து விட்டது. அருமையான மக்களுடன் இணைந்திருக்கக் கிடைத்த வாய்ப்பு அது. வாழ்க்கையின் அடுத்த சாதனைக்காக காத்திருக்கிறேன்' என்று கூறியுள்ளார் ஒக்டன்.

பேஸ்புக் நிராகரித்ததால் சோம்பிப் போய் உட்கார்ந்து விடவில்லை ஒக்டன். தனது கடினமான உழைப்பால் தன்னைத் தேடி வர வைத்து விட்டார் பேஸ்புக்கை தனது வாட்ஸ் ஆப் சாதனையால்.பேஸ்புக்கில் வேலை கிடைக்கவில்லையே என்று விரக்தியில் ருவிட்டரில் ஒக்டன் செய்தி போட்டிருந்தார் அல்லவா.சோகம் என்னவென்றால், அதே ருவிட்டரும் கூட பிரையனை ஒரு கட்டத்தில் நிராகரித்த நிறுவனம்தான்.

## முகப்புத்தகத்துக்கு மூடுவிழா



இலங்கையில் இரண்டாவது மாணவியையும் பேஸ்புக் காவுகொண்டுவிட்டது. ஏற்கனவே குருணாகல் மாணவி ஒருத்தியும் பேஸ்புக்கில் இன்னொரு இளைஞனோடு இருக்கும் புகைப் படம் வெளியானதால் உயிரை மாய்த்திருந்தாள். அதேபோலவே இந்த மாணவிமுகப்புத்தகத்தில் படத்தைப் பதிவிட்ட விவகாரத்தாலேயே தற்கொலை செய்ய நேர்ந்தது.

ஆனால் அதற்கான மூலகாரணங்களை ஆராயாது இதுதான் சமயம் என்று முகப் புத்தகத்துக்கு இலங்கையில் மூடுவிழா நடத்த அரசு முனைப்புக்காட்டி வருகிறது. ஏனெனில் அரசுக்கு எதிரான கருத்துக்கள், கேலிச்சித்திரங்கள் என்பவற்றை அச்சு ஊடகங்களில் வரவிடாமல் செய்தாலும் கூட அதைவிடவும் வீரியம் மிக்கப் படைப்புக்கள், கருத்துக்கள் முகப்புத்தகத்தில் பதிவிடப்படுகின்றன. இது அரசுக்கு சினத்தைக் கொடுத்திருந்தது. இப்போது முகப்புத்தகம் சாத்தானின் மறுவடிவம் என்று மக்களை நம்பவைத்து அதற்கு மூடுவிழா செய்ய முனைகிறது. செருப்புக்கு அளவாக காலை வெட்டும் முட்டாள்தனமே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் குறும்படங்கள்: அற்றுப்போகின்றதா அறம்?

**– பேசாப்பொருளைப் பேசுதல் –**

## கருத்து 1

### ஞானதாஸ் காசிநாதர்:

தற்போது ஈழத்துத் திரைப்படத்துறை இருக்கும் நிலையில் ஈழத்துத் திரைப்பட முயற்சிகள் எவையும் தவறல்ல என நினைப்பவன் நான். முயல்தலின் ஊடாகத் தவறுவிடுவதும் தவறுகளில் இருந்து கற்பதுமாகவே இந்தக்கட்டம் இருக்க முடியும்.

கதையமைப்பு, திரைக்கதை, இயக்கம், நடிப்பு, கமரா இதர தொழில்நுட்ப மற்றும் அழகியல் விடயங்கள் எப்படியாவது இருந்துவிட்டுப் போகலாம். காலப்போக்கில் இந்தத்துறையில் உறுதியாகத் தன்னை அர்ப்பணிப்பவர் தான் விடும் பிழைகளைத் தானே கற்றுத் திருத்திக் கொள்வர்.

இத்தகைய படங்கள் பற்றி பெரிய நீண்ட விமர்சனங்களும், அவற்றை அகிரா குரோசோவாவின் படங்களோடோ அல்லது பேர்க்மான் படங்களோடோ அல்லது பிரான்ஸ் நியூவேவ், இத்தாலி நியோரியலிசப் படங்களோடோ ஒப்பிட்டு படைப்பாளிகளை மனம் நோக வைக்க வேண்டியதில்லை.

ஆனால், சில அறங்கள் (Ethics), குறிப்பாக சர்வதேச ரீதியில் கடைப் பிடிக்கப்படும் மிகவும் அடிப்படை மனிதாபிமான அறங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். முக்கியமாக பார்ப்பவர்கள் முகம் சுழித்துக் கொள்ளும் அளவுக்கு அறமற்ற படைப்புகளை ஊக்குவிப்பது சரியல்ல.

ஈழத்தில் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஓரிரு படங்கள் அத்தகை யனவாகவே உள்ளன. பெண்கள் ஆண் சுகத்துக்கு அலைபவர்கள் போலவும் (எந்த யதார்த்தமும் இல்லாமல்) மாற்றுத் திறனாளிகள் கெட்டவர்கள் போலவும், பிச்சை எடுப்பவர்கள் ஏமாற்றுக்காரர் போலவும் எமது படங்களில் உருவகப்படுத்துவது எமது திரைப்பட முயற்சிகளின் காத்திரத்தன்மையை மட்டமாக்குவது போல் உள்ளது. படைப்பில் சுவாரசியத்தைக் கொண்டு வருவதற்கு மூளையைப் பிசைய வேண்டுமே தவிர மலிவான வழிகளை அதுவும் மற்றவர்களைப் புண்படுத்தும் வழிகளைக் கையாளக் கூடாது. இது ஈழத்துத் திரைப்படங்களுக்கு ஒரு தவறான, கேலியான அடையாளத்தைக் கொடுத்துவிடும்.

உண்மையில் திரைப்படம் ஆக்குதல் அல்லது படைப்பது பற்றி நாம் நிறையக் கற்கவும் அனுபவப்படவும் வேண்டியுள்ளது. இதற்கு நேரம் எடுக்கலாம். ஆனால் சில அடிப்படை அறங்களைக் கடைப்பிடிக்க எந்த நேரமும் தேவையில்லை.

இப்போதைக்கு ஈழத்துச்சினிமாவுக்கான இலகுவாக வரையறை செய்யக்கூடிய அடையாளமாகவும் செல்நெறியாகவும் சர்வதேச ரீதியில் கடைப்பிடிக் கப்படும் அடிப்படை மனிதாபிமான அறங்களை மீறாது இருப்ப தையே நாம் வைத்திருக் கலாம்.

உதாரணமாக இந்தியப்படங்களில் மாற்றுத் திற னாளிகளை, பிச்சைக்காரரை, பெண்களை, மொட்டைத் தலையுள்ளவர்களை, கால் ஊனமுற்ற வரை, முதுகு கூனியவரை வைத்து படாதபாடு படுத்துவார்கள், கேவலப்படுத்துவார்கள் - வர்த்தகத் தேவைக்காக!

ஆனால் எமது படங்களில் அவை இல் லாமலிருப் பதே இப்போதைக்கு எமக்கான அடையாளமாகவும் அதுவே பலவழிகளில் அனுகூலமாவும் இருக்கும்

ஈழத்துச் சினிமாவை உருவாக்க வெறும் படைப் பாற்றல் திறன் மட்டுமல்ல, மூலோபாய ரீதியிலான அணுகுமுறையும் (Strategical Approach) வேண்டியுள்ளது என்பதை திரைப்பட முயற்சியில் ஈடுபடுபவர்கள் மனதில் கொள்ளல் நல்லது.

## கருத்து 2

### டேமியன் பெனடிக்ற்:

ஈழப் படம் காட்டிறம் எண்டுசொல்லி தமிழ் நாட்டு குப்பைகளைத் தழுவி ஈழத் தமிழரை முட்டாள் ஆக்காமல் இருக்க வேணும். முயன்று பிழைவிடுகிறதிலும் ஒரு தனித்தன்மை இருக்க வேணும். எங்கட அடையாளமும் பிரச்சினையும், மகிழ்ச்சியும்வெளிப்பட வேணும். நேர்த்தி, நெறியாள்கை பிசகினால் அதை முயன்று தோற்ற ஈழச்சினிமா எண்டு சொல்ல லாம். அதைவிட்டிட்டு ஒரு இந்திய மசாலா மாதிரிப் படத்தை எடுத்துப்போட்டு ஈழச் சினிமா எண்டு சொல்லக்கூடாது.

### ஞானதாஸ் காசிநாதர்:

*நீங்கள் கூறும் விடயம் கொஞ் சம் சிக்கலானது. அது அவரவர் நிலைப்பாடு, அவரவர் எவ்வகை யான சினிமா செய்யப் போகிறர்கள் என்பது பற்றியது. இதில் எனக்கு ஒரு நிலைப்பாடு உள்ளது. மற்றவர்களுக்கு வேறு நிலைப்பாடு இருக்கலாம். இந்தியச் சினிமா மாதிரி ஒரு சினிமாவைச் செய்து இந்தியாவிலே ஓட வைக்கப் போகிறோம் என்று சிலர் விரும்பலாம். கனவுகாணலாம். அதில் நானோ அல்லது நீங்களோ தலையிட முடியாது.*

*ஆனால் நான் இந்த விவாதத் தின் தொடக்கத்தில் சொன்ன விடயம் மிக மிக அடிப்படை யானது. இது மற்றவர்களைப் பாதிக்கும் விடயம். நாம் விரும் பினால் சட்ட நடவடிக்கை கூட எடுக்கலாம். எங்களுக்கு என ஒரு அரசு இருந்தால் நாம் சட்டமாக்கலாம். நாமும்சரி அல்லது தமிழ் ஊடகங்களும் சரி இந்த விடயத்தைக் காரணம் காட்டி அத்தகைய படைப்பு களை மக்களிடமிருந்து அந் நியப்படுத்தலாம். ஆனால் ஒருவர் இந்தியாப்படம் மாதிரிச் செய்துவிட்டார் அல்லது ஹொலிவூட் படம் மாதிரிச் செய்துவிட்டார் என்பதற்காக அதற்கு எதிராக குரல் கொடுக்க எம்மிடம் தர்க்கரீதியான காரணம் இருக்காது. அது அவரவர் கோட்பாடு; நிலைப்பாடு சார்ந்தவிடயமாகவே பார்க்கப்படும. நான் சொல்ல வருவது குறைந்த பட்சம், இந்த அடிப்படையிலாவது ஒரு தனித்துவத்தையும் அடை யாளத் தையும் கொண்டு வரவேண்டும் என்பது தான்.*



## கருத்து 3

### பாஸ்கி டி ராஜ்:

*ஈழத் தமிழ்ச் சினிமாத்துறை தென்னிந்தி யச் சினிமாவை பின்தொடர முனையா மல், அருகேயிருந்த சிங்களச் சினிமாவுடன் கைகோர்த்து வளர்ந்திருந்தால் சர்வதேச விருதுகளைப் பெறும் நிலைக்கு இன்று வளர்ந் திருக்கும். நாம் அகிரோ குருஷோவாவுடன் எம் சினிமாத் தரத்தை ஒப்பிடத் தேவை யில்லை. ஆனால் ஏன் அருகே கொழும்பி லிருந்த லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசுடன் ஒப்பிட முடியவில்லை? சிங்கள சினிமா சர்வதேச விருதுகளை அன்றே ஈட்டிக்கொண்டமைக்கு இன்று நாம் எமக்குக் கூறும் நொண்டிச் சாட்டுகள் ஏன் அவர்களுக்குத் தடையாக அமையவில்லை? இலங்கையாரான பாலுமகேந் திரா படைத்த வீடும் சந்தியாராகமும் எம்மவர் களால் இலங்கையில்கூட படைத்திருக்கக் கூடியவையே! - தொழில்நுட்ப ரீதியில் சரி, முதலீட்டு அளவிலும் சரி! நாமோ, எம்.ஜி. ஆர். தனமான கதாநாயகர்களுக்கும் மோகனசுந்தரக் கதாநாயகிகளுக்கும் ஈடுகட்ட முனைந்து தோற்று, அதற்கு காரணங்கள் கற்பிக்க விளைகிறோமேயன்றி, யதார்த்தத்தைக் கிளறிப் பார்த்து கதைப்பொருளைக் கண்டு பிடித்து அதைச் சினிமா மொழியில் சித்திரிக்க முடியாத குருடர்களாயிருந்திருக்கிறோமென்பதை உணர்கிறோமில்லை. எமக்கு இப்போது தேவை அங்கலாய்ப்புகளல்ல. எட்டப் பறக்கும் தென்னிந்தியச் சினிமாவின் மாயாஜால ஜிமிக்குகளை எட்டிப்பிடிக்கும் ஆதங்கத்தில் ஒரடி ஏறி ஈரடி சறுக்குவதை விடுத்து, எம் மத்தியில் பரந்திருக்கும் எண்ணிறந்த கதைப்பொருள்களை யதார்த்தக் கண்கொண்டு நோக்கி அர்த்தபூர்வமான வற்றைத் தெரிந்து சினிமா மொழியில் வெளிப்படுத்துவது எப்படி என்ற பயிற்சியே!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை



நான் ஈர வெங்காயம் உரிப்பேன். நேசன், தரையில் அமர்ந்து தேங்காய் துருவுவார். தலைமைச் சமையல்காரர் என்ற தோரணையில் பண்டிதர் மண்ணெண்ணெஅடுப் புடன் போராடுவார். பண்டிதர்குறிப்பிடும்அளவுகளில் ரகுவும் சங்கரும் காய்கறி நறுக்கிக் கொடுப்பார்கள்.

சில சமயம் சிறீஇறைச்சி காய்ச்சும் பொறுப் பை தாமே ஏற்பார். அவருடைய கறி தனிச் சுவை யாக இருக்கும். பிரபாகரனும் அடிக்கடி இந்தக் கும்மாளத்தில் கலந்து கொள்வார். அவருடைய கோழிக்கறி தனிச் சுவையானது. இவை எல்லாம் ஒரு சாதாரண நடைமுறைப் போலப்பட்டாலும், பிரபாகரன் தமது போராளிகளுக்கு வழங் கிய பயிற்சியின் வெளிப்பாடே இது. சமையற் தகைமையும் உடையவர்களாக இருப்பது கெரில்லாப் போராளிகளின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று என்பதைப் பிரபாகரன் அவர்களுக்குப் புகட்டியிருந்தார். சமையல் முடிந்து அறை துப்பரவாக்கப்பட்ட பின், எல்லோரும் போய்க் கழுவிக் குளித்து விட்டு வருவோம். சமைத்ததைப் பகிர்ந்து புசிப்போம். பிரபாகரனும் சுவைத்து உண்பார். அவரும் அவருடைய போராளிகள் அனைவரும் தரமான சமையலாளிகளே. ஆனாலும் பண்டிதரே அனைவரிலும் சிறந்த சமையற்காரர் என்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட உண்மை.

சாப்பிட வேண்டுமானால் சமைக்க வேண்டும். அதற்கு முன் சந்தைக்குப் போக வேண்டும். மேற்குலகில் என்றால், உணவை மொத்தமாக வாங்கி குளிர்சாதனப்பெட்டியில் சேமித்து வைக்கலாம். இந்தியாவில் அப்படி அல்ல. உடன் மீன், இறைச்சி, காய்கறி ஆகியவற்றை அன்றாடம் வாங்க வேண்டியது தேவையாகும். ஆனபடியால் திரு. திருமதி பால்சிங்கமும் பண்டிதரும் தினமும் சந்தைக்குப் புறப்படுவோம். மற்றவர்களில் யாராவது விரும்பினால், அவர்களும் கூடி வருவார்கள். முற் பகல் வெய்யிலில் சந்தைக்குப் புறப்படுவோம். ஒரு கிலோமீற்றர் நடந்து, பேருந்து தரிப்பிடத்தை அடைவோம். இடக்கு முடக்கான பெரிய சாம்பல்- பச்சைநிறப் பேருந்தைக் கண்டதும் எம்மில் ஒருவர் குறுக்கேநின்று மறிப்போம். பாலாவும் நானும் பேருந்தில் திறந்த யன்னல் பக்கமாக அமர்வோம்.

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 24**

**அடேல் பாலசிங்கம்**



(பதிவு தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 609

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| 12 | | 13 | | ■ | 14 | | ■ |
| | ■ | 15 | | 16 | | ■ | 17 |
| ■ | 18 | | ■ | 19 | | 20 | |
| 21 | | | 22 | | ■ | 23 | |
| 24 | | ■ | | ■ | 25 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

**மேலிருந்து கீழ்**

1. உண்ணாதிருப்பது.
2. கிரக நிலையை கணித்துக் கூறுபவன்.
3. வாழ்.
4. தேய்.
5. புதினம்.
6. மாத்திரை.
8. விண்மீன்.
10. கூடாதது அல்ல.
13. தீ மூட்டி எரிக்கும் செயற்பாடு.
14. நிகழ்கால நாள் .
16. அழித்தல் ( தொழில்).
17. சிரசில் எழுதப்பட்டது.
18. தீவிரமான நிலைமை.
20. உலோகத்தை மெல்லிய படையாக்கினால் வருவது.
21. ஆதி மனிதன் வாழ்ந்தது இங்கே.
22. புரவி.

**இடமிருந்து வலம்**

1. விசாரித்தறிதல்.
4. ஒத்தாசை.
7. பத்திரிகையின் குறிப்பிட்ட ஒரு தொடரை இப்படிக் கூறுவர்..
8. பொன், வெள்ளி போன்றவற்றை உரைத்துப் பார்ப்பது இதில்.
9. வழக்கில் மனுதாரர்.
10. மத்தி.
11. பின்னுவது.
12. சாய்தல்.
14. வீடு.
15. பலதும் சேர்ந்திருப்பதை இப்படிக் கூறுவர்.
18. பாரமான.
19. கட்டுப்பாடில்லாமல் அலைபவன்.
21. தாய், தகப்பன், பிள்ளைகள் சேரும் அலகு.
23. பாடகன் .
24. கணவனை இழந்த நிலைமை.
25. தங்குமிடம்

## போட்டி இல. 606 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** – ச.மதன், இல: 344/7. சந்திரா ஒழுங்கை. மட்டக்களப்பு.

**2ஆம் பரிசு** – கா.பொ. இ. குலசிங்கம், 5ஆம் வட்டாரம், யா/ நயினாதீவு.

**3ஆம் பரிசு** – முருக நடராசன், 1ஆம் வட்டாரம் , கைவேலி, புதுக்குடியிருப்பு , முல்லைத்தீவு.

## பாராட்டுப் பெறுவோர்

(1) எஸ்.பாலசுப்பிரமணியம்,
இல;-176/37, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை.

(2) ந.பதிவேந்தன்,
இல;-7/2, பிரசாந்வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

(3) திருமதி.முகுந்தா ஜெயசோதி,
93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு-06.

(4) பீ.எஸ்.ஏ. தாஹிர்,
10/1, மத்திய வீத், காத்தான்குடி-08.

(5) சி.கிரிசா ,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

(6) வே.சரஸ்வதி,
அம்பன், குடத்தனை.

(7) தி. பிரியதர்சினி,
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

(8) றெக்சி மகிழம்மா,
மே/பா, தேவதாஸ் அல்மேடா, முருங்கன்பிட்டி, முருங்கன்.

(9) ஜெ.ஜெயலக்ஷன்,
பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(10) திருமதி ஈ.-தவமணி,
இல; 125/1, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 609

சொற்சிலம்பம் போட்டி 609ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் மற்றும் மார்ச் 26ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சொற்சிலம்பம் போட்டி இல. 607 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.அந்தாதி, 2. டமாரம், 3. காலம், 4.சதி, 5. மதுரை, 7.அதிதி , 9.மினக்கேடு, 10.கரும்பு, 12.குரு, 13.தீன், 14.வில்லன், 15.மதில், 16. சம்பா, 18.சகல, 20.சகா ,

**இடமிருந்து வலம்**


1.அட்டகாசம், 6.மாலதி , 7.அது, 8.தாமிரம், 10.கதிரை, 11.[illegible], 12.[illegible], 13.[illegible], 15.[illegible], 17.புசல், 18.[illegible], 21.[illegible], 22.[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காட்டில் குரங்கு ஒன்று தனியாக வசித்து வந்தது. அது மிகவும் குறும்புகாரக் குரங்காக இருந்தது. பின் விளைவுகளை எண்ணாமல் மிகுந்த குறும்புத்தனம் செய்யும்.

அந்த குரங்கு வசித்த அந்தக் காட்டுப் பகுதிக்குள் ஒரு விறகு வெட்டியும் வசித்துவந்தான். அவன் மரங்களை பெரிய துண்டுகளாக வெட்டிவந்து, அவற்றைத் தன் குடிசை அருகே வைத்து கோடரியால் பிளந்து அடுப்பில் வைக்கக் கூடியதாக சிறு துண்டுகளாக்கி, அவற்றைப் பக்கத்துக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று விற்று அதைக்கொண்டு குடும்பம் நடத்தி வந்தான். அவன் மரத்துண்டுகளைப் பிளப்பதற்கு ஆப்புகளைப் பாவிப்பது வழக்கம். ஆப்பு என்பது "ா" வடிவமான மரம் அல்லது இரும்பினால் ஆன ஒரு பக்கம் ஒடுக்கமாகவும் மற்றப் பக்கம் அகலமாகவும் உள்ள ஒரு

# ஆப்பிழுத்த குரங்கு




ஆயுதம்.

ஒருநாள் வழமைபோல் ஒரு பெரிய அடிமரத்துண்டை கோடரியால் பிளக்க ஆரம்பித்தான். அவனுக்குக் களைப்பு வந்ததால் அடிமரத்தின் பாதியளவு பிளந்திருந்த பிளவுக்கு இடையில் ஆப்புப் போல் ஒரு மரச்சக்கையை வைத்துவிட்டு ஓய்வெடுக்கச் சென்றான். விறகு வெட்டியின் செயலை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த குரங்கு அவன் சென்றவுடன் கீழே இறங்கி வந்தது.

விறகு வெட்டி விட்டுச் சென்ற மரத்துண்டின் மீதேறி மரத்தில் இறுக்கி இருந்த ஆப்பை நோக்கியவாறு அமர்ந்தது. அப்போது பிளவுபட்ட பகுதியில் அதன் வால் முழுவதும் செறிருந்தது. குரங்கு ஆப்பை இழுக்கும் அவதானத்தில் இருந்ததால் தனது வால் மரத்துண்டின் பிளவில் போயிருப்பதை உணரவில்லை. பின் தனது குறும்பு வேலையைச் செய்ய ஆரம்பித்தது. மரப்பிளவு இறுகாமல் செருகி இருந்த ஆப்பை தன் முழுப் பலத்தையும் பாவித்து ஆட்டி ஆட்டி எடுக்க முயற்சி செய்தது.

திடீரென்று அந்த ஆப்புத்துண்டு குரங்கின் கையோடு வந்துவிட்டது. உடனே பிளவுபட்ட மரத்துண்டு சுருங்கிக் கொண்டது. பிளவுக்குள் தொங்கியிருந்த வால் நசுங்க குரங்கு அலறியது. ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மரவெட்டி அலறல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். அதற்குள் குரங்கு வலி தாங்காமல் பரிதாபமாக மாண்டு போனது.

பாடம்: பின் விளைவுகளை ஆராயாமல் எந்த காரியத்தையும் செய்யக்கூடாது.




"இனி ஒரு கணம் கூட தாமதிக்க முடியாது. இந்த வாள் வேறொருவரின் கைக்குச் சென்ற மறுகணமே சுரங்கம் இடிந்து விடும். இப்போது சுரங்கம் அதிர்ந்து முடிவதற்கிடையில் நாம் அனைவரும் பத்திரமாக வெளியேறிவிட வேண்டும். இல்லாவிட்டால் நாம் இதற்குள்ளேயே சமாதியாக வேண்டியது தான்" என்று அந்தப் பேரோசையின் சூட்சுமத்தை அவன் அவசரமாக நாகசிம்மன் விளக்கினான். அடுத்தகணம் சுரங்கம் இன்னும் வேகமாக அதிரத் தொடங்கியது. இந்திரவர்மனும் சந்திரவர்மனும் மற்றைய இளவரசர்களையும், மணிமொழியையும் அழைத்துக் கொண்டு குகையை விட்டு வெளியே ஓடத் தொடங்கினார் கள். ஆயினும் குகையின் பாதை நீண்டு கொண்டே சென்றது. இவர்களின் ஓட்ட வேகத்தைப் போலவே சுரங்கத்தில் எழுந்த அதிர்வின் வேகமும் கணத்திற்குக் கணம் அதிகரித்தபடியே இருந்தது. மெல்ல மெல்ல குகையில் இருந்த சிறு கற்கள் கீழ் நோக்கி விழத் தொடங்கின.

நீண்ட தூர ஓட்டத்திற்குப் பின்னர் குகையின் வெளிப்புற வாசலை இளவரசர்கள் எல்லோரும் அடைந்தனர். ஆயினும் அங்கும் அவர்களுக்குத் துரதிர்ஸ்டமே காத்திருந்தது. குகையின் வாசல் மிகப்பெரிய பாறாங்கற்களால் இறுக மூடப்பட்டிருந்தது. ஒருவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆயினும் எப்படியும் குகையை விட்டு வெளியேற வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. "அவ்வளவு தான் இனிமேல் மீட்சியே இல்லை. இந்தக் குகைக்குள்ளேயே நாம் அனைவரும் மடிய வேண்டியது தான்" என்று இளவரசர்கள் அனைவரும் எண்ணிய போது நாகசிம்மன் பாறாங்கல்லைத் தன் சுண்டு விரலால் தீண்டினான். அடுத்த கணம் பாறாங்கல் அகன்று வழி தெரிந்தது. ஆயினும் வெறியேற வழி கிடைத்த சந்தோசம் இளவரசர்கள் ஒருவரிடமும் இல்லை. ஏனெனில் குகைக்கு வெளியே இவர்களின் வருகையை கேலி கலந்த பார்வையோடும் தன் பரிவாரங்களோடும் பார்த்தபடி இருந்தாள் மந்திரக்கிழவி.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

# மூளைக்கு வேலை கொடுங்கள்

## சில கணக்குப் புதிர் கள்

1. பதினொன்றோடு இரண்டைச் சேர்ந்தால் ஒன்றாகும். எப்படி?
2. எவ்வளவு முன்னேறுகிறீர்களோ அவ்வளவு விட்டுச் செல்வீர்கள். அது என்ன?
3. தலையிலிருந்து கால் வரை நான் உபயோகப்படுவேன். அதனால் நான் மெலிகிறேன். நான் யார்?
4. இருபத்தைந்தை எவ்வளவு முறை ஐந்தால் கழிக்க முடியும்?
5. இது உங்களை அழ வைக்கும், சிரிக்க வைக்கும், இளமையாக உணர வைக்கும். நொடியில் தோன்றினாலும் வாழ்நாள் முழுவதும் தொடரும். அது என்ன?
6. என்னால் உங்களுக்கு வியர்க்கும். நீங்கள் பலவீனமாவீர்கள். நான் உங்கள் இதயத் துடிப்பை அதிகரிப்பேன். நான் யார்?
7. அதற்கு கைகள் உண்டு, ஆனால் எதையும் பிடிக்க முடியாது; பற்கள் உண்டு, ஆனால் கடிக்க முடியாது; கண்கள் உண்டு, ஆனால் பார்வை கிடையாது. அது என்ன?
8. என்னால் ஓட முடியும், ஆனால் நடக்க முடியாது; எப்போதாவது பாடுவேன், ஆனால் பேச முடியாது; கைகள் உண்டு, ஆனால் விரல்கள் கிடையாது; தலையில்லை, ஆனால் முகம் உண்டு; நான் யார் தெரியுமா?
9. இங்கு பாதைகள் உண்டு, ஆனால் வாகனங்கள் செல்ல முடியாது; இங்கு காடுகள் உண்டு, ஆனால் மரங்கள் இருக்காது. அது என்ன?
10. எனக்கு நாக்கில்லை, ஆனால் நான் பேசுவேன். உலகில் உள்ள அனைத்து விஷயங்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். எனக்கு கை, கால் கிடையாது, ஆனால் மேலாடை உண்டு. என்னை யார் என்று தெரிகிறதா?




# விடுகதைகளும் விடைகளும்

07. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது. அது என்ன?
-கண்

08. மழை காலத்தில் குடை பிடிப்பான். அவன் யார்?
-காளான்

09. எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது. அது என்ன?
-மின்விசிறி

10. வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
-பூட்டும் திறப்பும்


## புதிர் கள் விடைகள்

1. 11 மணி நேரம் + 2 மணி நேரம் = 1 மணி
2. கால்தடங்கள்
3. சோப்
4. ஒரு முறைதான் (அதற்குப் பிறகு அது இருபதாகிவிடுமே)
5. நினைவுகள்
6. பயம்
7. பொம்மை
8. கடிகாரம்
9. வரைபடம்
10. புத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**2006**ஆம் ஆண்டு சகுந்தலாவுக்குத் திருமணமான போது 20 வயது. தறிப் பட்டறையில் தன்னுடன் பணிபுரிந்த நவராஜை, காதல் திருமணம் செய்துகொண்டாள். வெவ்வேறு சாதி என்பதால், இரு தரப்பு எதிர்ப்புகளையும் மீறித்தான் திருமணம் நடந்தது. மகிழ்ச்சியான மண வாழ்க்கையின் மூன்றாவது மாதத்தில் நவராஜ் அவளிடம் ஒரு உதவி கேட்டான்.

"எனக்குத் தெரிந்த ஒருவர் இரண்டு சிறுநீரகங்களும் பழுதாகி சாகக்கிடக்கிறார்.நீ ஒரு சிறுநீரகத்தைத் தானமாகத் தந்து உதவினால், அவர் உயிர் பிழைப்பார்" என்று சகுந்தலாவிடம் சொன்னான். இரக்கஉணர்வு மிகுந்த பழங்குடிக் கலாசாரத்தில் வளர்ந்த சகுந்தலா, தன் கணவனின் வேண்டுகோளை ஏற்றாள். ஏறக்குறைய 100 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சகுந்தலாவின் வலது பக்கச் சிறுநீரகம் அகற்றப்பட்டது. சிகிச்சை முடிந்ததும் தரகர்கள், நவராஜிடம் 50 ஆயிரம் ரூபாய் பணத்தைத் தந்தபோதுதான், அது தானம் அல்ல, வியாபாரம் என்று சகுந்தலாவுக்குப் புரிந்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு பின்பு... சகுந்தலாவிடம் இன்னொரு 'தானத்துக்கு' அடிபோட்டான் நவராஜ். இந்த முறை குரலில் பணிவு இல்லை. அதிகாரமே எஞ்சியிருந்தது. செயற்கைக் கருத்தரித்தல் மையங்களில் குழந்தையின் கருவை உருவாக்கத் தேவைப்படும் கருமுட்டைகளை சகுந்தலா தானமாகத் தர வேண்டும் என்றான் நவராஜ். 'மாதவிடாய் நேரத்தில் வீணாகப் போவதுதானே... அதை வைத்து ஒரு பெண்ணுக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்தால் நல்லதுதானே?" என்றான். இந்த முறையும் இவன் இதற்காகப் பணம் பெறுவான் என்பது தெரிந்தும், வேறு வழியின்றி அதற்குச் சம்மதித்தாள் சகுந்தலா. ஈரோடு தனியார் மருத்துவமனையில் 10 நாள்கள் ஹோர்மோன் ஊசி போடப்பட்டு கருமுட்டைகள் சேகரிக்கப்பட்ட பின்பு அனுப்பிவைக்கப்பட்டாள். இதற்காக நவராஜ் பெற்ற தொகை, 15 ஆயிரம் ரூபாய். இப்படி ஒன்றல்ல... இரண்டல்ல... கடந்த ஐந்து ஆண்டுகளில் 18 முறை சகுந்தலாவை கருமுட்டை வியாபாரத்தில் ஈடுபடுத்தியுள்ளான் நவராஜ்.

ஒரு வாகனத்தின் உதிரிப் பாகங்களை ஒவ்வொன்றாகக் கழற்றி விற்றுச் செலவழிப்பதைப் போல, சகுந்தலாவின் உடலைப் பயன்படுத்தியிருக்கிறான் நவராஜ். இரு குடும்பங்களையும் எதிர்த்துக்கொண்டு நடந்த திருமணம் என்பதாலும், வருமானத்துக்கு வேறு வழி இல்லை என்பதாலும் சகித்துக்கொண்டு இவற்றுக்குச் சம்மதித்த சகுந்தலாவால், ஒரு கட்டத்துக்கு மேல் இதைப் பொறுக்க முடியவில்லை. எதிர்த்தாள். அதன் விளைவோ... பயங்கரம்!

சேலம் – அரசு மருத்துவமனையில் தலை முதல் கால் வரை கட்டுகளுடன் படுத்துக்கிடக்கும் சகுந்தலாவின் வலிமிகு குரலைக் கேளுங்கள்.

"என் வீட்டில் மிகவும் வறுமை. இரண்டு பேரும் மில் வேலைக்குப் போனாலும் குடும்பத்தை கொண்டு நடத்த முடியவில்லை. அதனால் பணத்துக்காகத் தான் செய்கிறார் என்று தெரிந்தும் வேற வழி இல்லாம இதுக்கு ஒப்புக் கொண்டேன். ஆனால், வாங்கும் காசில் 1,000, 2,000 ரூபா வீட்டுக்குக் கொடுப்பதே பெரிது. மீதி எல்லாவற்றையும் குடித்தே தீர்த்துவிடுவார். ஒவ்வொரு முறையும் அவர்தான் யாரையாவது புரோக்கரை அழைத்துக் கொண்டு வருவார். எந்த ஊர், எந்த ஆஸ்பத்திரி, எப்போது வரவேண்டும் என்ற விபரங்களைப் புரோக்கர்தான் சொல்லுவார். பக்கத்து ஊராக இருந்தால், நானே போய் வருவேன். சில தடவை மதுரை, பெங்களூர், சென்னை என்று தூரமான ஊராக இருக்கும். அப்போதெல்லாம் அவரும் என் மாமியாரும் கூட வருவார்கள்.

போனதுமே என் உடம்பு நல்ல நிலையில் இருக்கிறதா என்று பார்க்க, ஒரு ஊசி போடுவார்கள். அது சரியாக இருந்தால், அப்புறம் 10 நாளைக்கு தினமும் மூன்று ஹோர்மோன் ஊசி போடுவார்கள். 13 ஆவது நாள் மயக்க ஊசி போட்டு கருமுட்டைகளைச் சேகரிப்பார்கள். மயக்கம் தெளிந்தால் அன்றிரவே வீட்டுக்கு அனுப்புவார்கள் . இல்லாவிட்டால் அடுத்தநாள் காலைதான்.

பணத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு இடத்திலும் ஒரு மாதிரி. 10,000, 15,000, 25,000 ரூபா வரைக்கும் கொடுப்பார்கள். சில ச[illegible] என்னிடம் தருவார்கள். சில சமயம் என் புருஷனிடம் கொடுப்பார்கள். எல்லாமே புரோக்கர்கள் வாங்கித் தருவதுதான்.

கல்யாணம் ஆன கொஞ்ச நாளிலேயே என் புருஷன் வீட்டில் உள்ளவர்கள் வந்து எங்களோடு சேர்ந்துவிட்டார்கள். இந்தக் கருமுட்டைகளைக் கொடுக்க ஊர், ஊராக என்னை அழைத்துக் கொண்டுபோகும்போது என் புருஷனும் மாமியாரும் கூடவே வருவார்கள். பணத்தை வாங்கி எண்ணி வைத்துக் கொள்வது அவர்கள்தான். எங்கே போனாலும் என் 5 வயதுப் பெண் பிள்ளையையும் கூட்டிக்கொண்டுதான் அலைவேன். நான் மலைவாழ் சாதி. அவர்

## கருமுட்டை தானம்

சில பெண்களுக்கு கருமுட்டையை உருவாக்க இயலாத உடல் பலவீனங்கள் இருக்கலாம். அத்தகைய சூழலில் மற்ற பெண்களிடம் இருந்து கருமுட்டையைத் தானம் பெறுகின்றனர். ஒவ்வொரு மாதமும் பெண்ணின் மாதவிடாய் நாள்களின்போது கருமுட்டைகள் உற்பத்தியாகின்றன. அவை கருவாக மாறாத நிலையில் வெளியேறுகின்றன. அவற்றைத் தானமாகப் பெற்று, மகபேறு அற்ற பெண்ணின் கணவனின் விந்தணுவுடன் இணைத்து, செயற்கை முறை கருத்தரித்தல் முறையில் கரு உருவாக்கி, மகபேறற்ற பெண்ணின் கர்ப்பப்பையில் வைத்து சிசுவை வளர்க்கிறார்கள்!




# பாலுமகேந்திராவுக்கு அஞ்சலிப்புகள்

அண்மையில் மறைந்துபோன ஈழத்தைச் சேர்ந்த இயக்குநர் பாலுமகேந்திராவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த வாரம் ஒரே நாளில் இரு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் வடமராட்சியில் நடைபெற்றன.

முதல் நிகழ்வு கடந்த 22.02.2014 சனிக்கிழமை இமையாணன், ஆகாயம் பதிப்பகத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது. உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ' பாலுமகேந்திரா;அழியாச்சுடர்' எனும் தொனிப்பொருளில் இந்த அஞ்சலிப்பில் கருத்துப் பகிர்வுகளை அ.யேசுராசா, சி.விமலன் ஆகியோர் வழங்கினர். அதன் பின்னர் கருத்தாடலும் பாலுமகேந்திராவின் 'நம்பிக்கை' 'தப்புக்கணக்கு' ஆகிய குறும்படங்களின் திரையிடலும் நடைபெற்றன. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோர்களே இதில் கலந்துகொண்ட போதும் காத்திரமான அஞ்சலிப்பாக இது அமைந்தது.

மற்றைய நிகழ்வு அதேநாள் மாலை 3 மணியளவில் பருத்தித்துறை ஞானாலயத்தில் நடைபெற்றது. இதில் குப்பிளான் ஐ.சண்முகன், கேதாரநாதன் ஆகியோர் பாலுமகேந்திரா தொடர்பான தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். இதன் பின்னர் பாலுமகேந்திரா தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றது.

பருத்தித்துறை ஞானாலயத்தில்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார். இதனால் அதை வேறு சொல்லிச் சொல்லிக் காட்டுவார்கள். "பெண்சாதியின் தீட்டு ரத்தத்தை எடுத்து வித்துப் பிழைக்கிறதுதான் பெரிய சாதியா?" என்று ஒருமுறை கேட்டுவிட்டேன். அடி, உதைதான் கிடைத்ததே தவிர, யாரும் மாறவில்லை. இது வரவர அதிகமாகிவிட்டது. என்னை வைத்துப் பணம் சம்பாதித்துச் சுகம்

ஆர்.ராஜசேகர்



கண்டுவிட்ட புருஷன், எந்த வேலைவெட்டிக்கும் போவது இல்லை. வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு விதவிதமான புரோக்கர்களை அழைத்துவருவதுதான் வேலை. எனக்கும் உடம்புக்கு முடியாமல் போய் மிகவும் மெலிந்து விட்டேன். இதற்குப் பிறகும் கணவரின் சொல் கேட்டு நடந்தால் விரைவில் நான் செத்துப்போய்விடுவேன் என்றும் அப்போது என் குழந்தை அநாதையாகிவிடுவாளோ என்றும் பயம் வந்துவிட்டது.அதனால் நடந்ததைச் சொல்லி தெரிந்தவர்களிடம் தீர்வு கேட்டேன். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்துக்கு போகச் சொன்னார்கள்.அதன் பிறகு என்னையும் குழந்தையையும் காப்பாற கட்சி அலுவலகத்திலேயே தங்க முடிவெடுத்தேன்" என்கிறார் சகுந்தலா.

சகுந்தலா கம்யூனிஸ்ட் அமைப்பு அலுவலகம் சென்றார். கட்சி உறுப்பினர்களின் வழிகாட்டுதல்படி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒரு வக்கீல் மூலம் சகுந்தலாவும் நவராஜும் பிரிந்துவிடுவதாக எழுதிக் கொடுத்துவிட்டுப் பிரிந்தனர். அதில் இருந்து நான்காம் நாள் திடீரெனக் கட்சி அலுவலகத்துக்குள் வெறிகொண்டு நுழைந்தான் நவராஜ். அங்கு கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினரும், ஓவியருமான பொன்.கதிரவன் இருந்தார். அவரைச் சரமாரியாக வெட்டியவன், சற்றுத் தூரத்தில் ஒரு வீட்டில் இருந்த சகுந்தலாவையும் விடு புகுந்து வெட்டித் தள்ளினான். ரத்தம் படிந்த அரிவாளுடன் வீதியில் ஓடி வந்தவனை பொதுமக்கள் பிடித்து காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளனர். இப்போது நவராஜ் சிறையில். உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த பொன்.கதிரவன் இப்போதுதான் சற்றே உடல்நலம் தேறியுள்ளார். தலை முதல் கால் வரை கட்டுகளுடன் சகுந்தலா, சேலம் – அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இப்போது சகுந்தலாவுக்கு யாருமே இல்லை. சோறு ஊட்டவும், கழிப்பறை சென்று வர உதவவும் ஒரே ஒரு உறவுப்பெண் உடன் இருக்கிறார். மற்றபடி அவர் அநாதையைப் போல தனியே கிடக்கிறார். உடலின் எந்த உறுப்புகள் தொடர்ந்து இயங்கும், எவை இயங்காது என்பதைச் சொல்ல முடியாது. இன்னும் சில அறுவைசிகிச்சைகள் மிச்சம் இருக்கின்றன.

இது தனி ஒரு சகுந்தலாவின் கதை இல்லை.தமிழகத்தின் பள்ளிப்பாளையம், குமாரபாளையம் பகுதி நெசவாளர்கள், வறுமை தாங்காமல் தங்கள் சிறுநீரகங்களை விற்பனை செய்வது பல வருடங்களாக நடந்துவருகிறது. சகுந்தலாவும் தனது ஒரு சிறுநீரகத்தை இழந்துள்ளார். இவரைப் போல வெளியில் தெரியாமல் ஒற்றைச் சிறுநீரகத்துடன் வாழ்பவர்கள் இந்தப் பகுதியில் அநேகம் பேர். அந்தக் கோர வறுமையின் இன்னொரு முகம்தான், இந்தக் கருமுட்டை வியாபாரம்.

"நான் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்குப் போகும்போதும் அங்கே என்னை மாதிரியே நிறைய பேர் கருமுட்டை கொடுக்க வருவதைப் பார்த்திருக்கிறேன். எல்லோருமே என்னை மாதிரி ஏழைகள்தான். ஆஸ்பத்திரியில் கருமுட்டை கொடுக்கச்

# திடுக்கிட வைக்கும் உண்மைகள்

செல்பவர்களிடம் 'தானம் பண்ணுகிறோம் என்றுதான் எழுதி வாங்கிக் கொள்வார்கள். ஆனால், 10 நாள் கூலியை விட்டுட்டு, வேற ஊரில் இருந்து வந்து ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து தானம் பண்ணுவதற்கு அவர்கள் ஒன்றும் வசதியானவர்கள் இல்லை. எல்லாருமே பணம் வாங்கிக் கொண்டுதான் கருமுட்டையைக் கொடுக்கிறார்கள்" என்று சகுந்தலா தெளிவாகச் சொல்கிறார்.

இது மிகப் பெரிய நிழல் உலகவலையமைப்பு வியாபாரம். மருத்துவமனைகள், மருத்துவர்கள், தரகர்கள் என இதன் பின்னால் மிகப்பெரிய வலையமைப்பு தமிழகம் முழுவதும் செயற்படுகிறது" என்கிறார் அகில இந்திய தொழிற்சங்க மையச் சபையின் தமிழகமாநிலத் தலைவர் என்.கே.நடராஜன்.


"சகுந்தலா மூலமாகத்தான் எங்களுக்கு கருமுட்டை வியாபாரம் பற்றி தெரியவந்தது. விசாரித்தால், சேலத்தின் முன்னணி மருத்துவமனைகள் உட்பட தமிழகம் முழுவதும் உள்ள பல பெரிய தனியார் மருத்துவமனைகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. இதற்காகவே புரோக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வறுமையில் உழலும் நெசவாளர் குடும்பங்களை மனம் மாற்றி இதற்கு அழைத்து வருகின்றனர். இந்தப் பகுதியின் நெசவாளர் குடும்பங்கள் கடுமையான வறுமையிலும் கடன் தொல்லையிலும் சிக்கியிருக்கின்றன. குறிப்பாக, ஏதேனும் ஒரு தறிப் பட்டறை முதலாளியிடம் 50 ஆயிரம், 1 லட்சம் முன்பணம் வாங்கிக்கொண்டு, குடும்பத்துடன் சில ஆண்டுகளுக்கு அரைக் கொத்தடிமைகளாக உழைக்கின்றனர். அந்தக் கொத்தடிமைத்தனத்தில் இருந்து மீண்டு வர தன் ஒரு சிறுநீரகம் பயன்படும் என்றால், அதையும் விற்கத் துணிகின்றனர். கருமுட்டை விற்பனை என்பதும் இந்த அடிப்படையில்தான் நடக்கிறது" என்கிறார் அவர்.

தற்போது சகுந்தலாவுக்கு உதவிகள் செய்துவரும் வழக்கறிஞர் தமயந்தியிடம் பேசியபோது, "அந்தப் பெண்ணைப் பார்க்கும்போது மனம் கனத்துப்போகிறது. ஒரு சிறுநீரகத்தை இழந்து, 18 முறை கருமுட்டை வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு, இன்று உடல் எங்கும் வெட்டுக் காயங்களுடன் நடைப்பிணம் போல படுத்துக்கிடக்கிறார். இந்தக் குற்றத்தைச் செய்த நவராஜ் மட்டும் இதில் குற்றவாளி அல்ல. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பெண்ணின் சம்மதத்துடன் கருமுட்டையைத் தானம் பெறலாம் என்கிறது சட்டம். ஆனால் சகுந்தலாவோ, சராசரியாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். 'தானம் என்ற பெயரில் சகுந்தலாவிடம் இருந்து கருமுட்டை எடுத்து வியாபாரம் செய்த மருத்துவர்கள், மருத்துவ மனைகள், புரோக்கர்கள்... என அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களின் தொழில் உரிமங்கள் ரத்து செய்யப்பட வேண்டும்" என்கிறார்.

இந்தக் கருமுட்டை வியாபாரக் கும்பல் தமிழகம் முழுக்கப் பரவியிருக்கிறது. அந்தக்கும்பலைப் பிடித்து தண்டித்தால் மாத்திரம் இதற்குமுற்றுப்புள்ளி வைக்க முடியுமா? இவர்களைப் போன்ற ஏழைகளின் வறுமையைப் பயன்படுத்தி இன்னொரு கும்பலிடம் இவர்கள் கருமுட்டைகளை விற்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? விடையின்றியே தொடர்கின்றன வினாக்கள்.

---

# மிச்சக்காசு – குறும்பட விமர்சனம்



கடந்தவாரம் வெளியாகி இருக்கிறது ' மிச்சக்காசு' குறும்படம். ம.தி.சுதாவின் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தக் குறும்படத்துக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இந்தப் படம் கைபேசியில் ஒளிப்பதிவு செய்யப்பட்டு வெறும் 600 ரூபா செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரமாண்டமான தயாரிப்புச் செலவில் இலட்சக்கணக்கில் காசை விழுங்கி குறும்படம் என்ற பெயரில் வெளியாகும் கோமாளித்தனமான படைப்புக்களுக்கு மத்தியில் ம.தி.சுதாவின் மிச்சக்காசு நம்பிக்கையைத் தரும் படைப்பாக இனங்காணப்படுகிறது.

கடைகளில் நுகர்வோருக்குப் பொருளைக் கொடுத்துவிட்டு மிகுதிப்பணமாக சில்லறையைக் கொடுக்காமல் அதற்குப் பதிலீடாக ரொபி, தீப்பெட்டி போன்றவற்றை திணிக்கும் வர்த்தகர்களுக்கு சாட்டையடிபோல இந்தப் படத்தின் கதை அமைக்கப்பட்டுள்ளது. கடைக்குச் செல்லும் சிறுவனை மட்டுமே பாத்திரமாகக் கொண்டு (கடைக்காரர் பாத்திரம் கடைசியில் மட்டும் வருகிறது) படைக்கப் பட்டிருந்தபோதும் பார்ப்போருக்கு இரசனைப் புள்ளியில் தொய்வு ஏற்படாதவண்ணம் திரைக்கதை அமைந்துள்ளது. இடையிடையே குறும்புத்தனங்களும் எட்டிப்பார்க்கின்றது. தன் செல்லப் பிராணியான நாயை சிறுவன் ஓட்டோவில் ஏற்றிச் செல்வது போல விளையாடுவது இயல்பாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மொழிப் பிரயோகமும் சிறப்பான முறையில் கையாளப் பட்டிருக்கிறது. கைபேசியில் படப்பிடிப்பு நடந்திருந்தாலும் காட்சிகள் இரசிக்க வைக்கின்றன. எனினும் சிறுவன் வீட்டுக்கும் கடைக்கும் அடிக்கடி பயணிப்பதை ஒரே கால அலகில் மீண்டும் மீண்டும் காட்டுவது சலிப்பை ஏற்படுத்துகிறது. அத்தோடு மிச்சக்காசுக்குப் பதிலாக வேறு பொருள்களை கடைக்காரர் சிறுவனிடம் திணிப்பது துல்லியமாகப் பதிவு செய்யப் படவில்லை. மற்றும்படி யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றில் ஒழுங்கை, கடை என்பன யதார்த்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மிகச் சிறிய கதைக்கருவை சரியான முறையில் இயக்குநர் வெளிப்படுத்தியிருக்கிறார். சிறுவனாக நடித்துள்ள சிவசங்கர் செயற்கைத்தன நடிப்பை விடுத்து இயல்பாகவே தோன்றுகிறார். மதீசனின் இசை படத்துக்கு இன்னும் பலமூட்டுகிறது.

இதுபோன்ற படைப்புக்கள் ஈழத்து குறும்படத் துறையின் வளர்ச்சிக்கு கட்டியம் கூறி நிற்கின்றன என்பதை மறுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுவேற்றப்பட்ட கவிஞன்

எழுத்துச் சுதந்திரத்துக்கு இடப்பட்டிருக்கும் பெரிய தளைகளில் ஒன்றாக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் சில பிரிவுகள் இருக்கின்றன. அவை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று பலர் குரலெழுப்பிவரு கிறார்கள். ஆனால், இதே சமயத்தில் ஈரான் நாட்டில் கவிஞர் ஒருவர் தூக்கிலிடப்பட்டிருக்கிறார். இந்த சம்பவத்தைப் பற்றி அதிகம் பேசப்படாதது ஆச்சரியத்தை அளிக்கிறது.

### எழுத்துக்கு எதிரான போர்

ஈரான் பல ஆண்டுகளாக எழுத்துக்கு எதிரான போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. சாத்தானின் பாடல்கள்' (த சாட்டானிக் வெர்ஸஸ்) என்ற புத்தகத்தை எழுதிய சல்மான் ருஷ்டியைக் கொலை செய்பவர்களுக்கு ஈரான் வெகுமதி அளிப்பதாகத் தெரிவித்திருந்தது நமக்குத் தெரியும். இந்த வெகுமதி 1989ஆம் ஆண்டு, பெப்ரவரி 14ஆம் தேதி அயத்துல்லா கொமேனியால் அறிவிக்கப்பட்டது.

2.8 மில்லியன் டொலர்களாக இருந்த வெகுமதித் தொகை 2012ஆம் ஆண்டு 3.3 மில்லியன் டொலர்களாக அதிகரிக்கப் பட்டது. 25 ஆண்டுகள் முடிந்த பிறகும் இந்த அறிவிப்பு இன்னும் நடைமுறையில் இருப்பதாக 14 பெப்ரவரி 2014இல் ஈரானின் மதத் தலைவர்களில் ஒருவரான அஹமத் கடாமி அறிவித்திருக்கிறார். ருஷ்டி மன்னிப்புக் கேட்டாலும் இந்த அறிவிப்பு திரும்பப் பெறப்பட மாட்டாது என்பதை அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

1988 -1998ஆம் ஆண்டுகளில் ஈரானில் 80-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள், அறிவுஜீவிகள் மற்றும் கவிஞர்கள் கொல்லப்பட்டுள்ளதாக வரலாற்று அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள். கொலைகளைப் பற்றிப் பேசுவதே ஆபத்தில் முடிய வாய்ப்பு இருக்கிறது.



இவற்றைப் பற்றி ஆராய முற்பட்ட சையத் ஹஜாரியான் என்ற ஈரானிய அறிஞர், தலையில் சுடப்பட்டு, சரியாகப் பேச முடியாமல் சக்கர நாற்காலியில் இயங்குகிறார்.

### பொது இடங்களில் தூக்கு

ஈரானில் குற்றவாளிகள் என்று அரசால் கருதப்படுபவர்கள் பொது இடத்தில் தூக்கிலிடப்படுகிறார்கள். குற்றவாளியின் கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டு, அவர் கிரேனால் தூக்கப்படுவார். சில இடங்களில் தூக்குமேடைகளும் அமைக்கப்படுகின்றன. உதாரணமாக, பெப்ரவரி மாதம் 13ஆம் தேதி அன்று இரு குற்றவாளிகள் ஷிராஸ் நகரில் பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடப் பட்டிருக்கிறார்கள். இன்றைய ஈரானின் அரசு ஒரு மிதமான அரசு என்று சொல்லப்படுகிறது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த அரசுதான் ஒரு கவிஞனைத் தூக்கிலிட்டிருக்கிறது. பொது இடத் தில் அல்ல, ரகசியமாக.

### ஈரானின் அரேபிய மக்கள்

தூக்கிலிடப்பட்ட கவிஞருக்கு வயது 32. அவரது பெயர் ஹஷெம் ஷபானி. அரேபியர். அரேபிய மொழிக் கவிஞர். ஈரானில் பேசப் படும் மொழி 'ஃபார்சி' என்று அழைக்கப்படும் பாரசீக மொழி. இங்கு வசிப்பவர்களும் பாரசீகர் கள்தான். ஈராக்கை ஒட்டிய குசெஸ்தான் என்ற மேற்குப் பகுதி யில் அரேபியர்கள் வசிக்கிறார்கள். ஈரானின் மக்கள்தொகையில், அரேபிய வம்சாவளியினர் மூன்று சதவீதத்திலிருந்து எட்டு சதவீதம் வரையில் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் ஷியா பிரிவைச் சார்ந்தவர்கள். பலர் நகரங்களில் கூலி வேலை செய்கிறார்கள். குசெஸ்தானில் இருப்பவர்கள் விவசாயிகள் அல்லது ஆடு மேய்ப்பவர்கள்.

ஈரானைப் போல அதன் அண்டை நாடான ஈராக்கிலும் பெரும்பாலானோர் ஷியா பிரிவைச் சார்ந்தவர்கள். ஆனால், சதாம் ஹுசேன் காலத்தில் இரு நாடுகளுக்கும் கடுமையான பகைமை இருந்தது. இரு நாடுகளுக்கும் இடையே 1980-களில் நடந்த போரில் 12 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

இராக் ஒரு அரேபிய நாடு என்பதால், அந்த நாட்டை ஆதரிப்பதாக ஈரானிய-அரேபியர்கள்மீது சந்தேகப் பார்வை விழுந்தது. பலர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அன்று தொடங்கி இன்று வரை ஈரானில் அரேபியர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.


### அரேபியக் கவிஞர்

'ஹஷெம் ஷபானி அஹ்வாஸி' என்று அழைக்கப்படும் அரேபிய மக்களுக்காகக் குரல்கொடுத்தவர். வன்முறை வேண்டாம், அமைதியாகப் போராடலாம் என்று சொன்னவர். தொலைக்காட்சி ஒன்றில் அவர் தீவிரவாதி களுக்குத் துணைபோனேன் என்று ஒப்புக் கொண்டதாகக் கூறப்படு கிறது. ஆனால், சிறையி லிருந்து அவர் எழுதிய கடிதம் ஒன்றில் தான் எப்படித் துணை செய்தேன் என்பதைக் கூறுகிறார்:

**"என்னுடைய மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதையும் தூக்கிலிடப் படுவதையும் பார்த்துக்கொண்டு நான் பேசாமல் இருக்க முடியாது. உலகத்தில் இருக்கும் எல்லா மக்களும் சுதந்திரமாக எல்லா உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். எனது மக்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை எதிர்கொள்ள நான் எந்த ஆயுதத்தையும் எடுக்கவில்லை எனது பேனாவைத் தவிர"**

ஷபானி அரேபியக் கவிஞர் மட்டு மல்ல, அவர் பாரசீக மொழியிலும் கவிதை எழுதியிருக்கிறார். மனைவியையும் ஒரே குழந்தையையும் விட்டுச்சென்றிருக்கும் அவர், சிறை செல்லும் வரை, ஈரான்-ஈராக் போரில் படை வீரராகப் பணிபுரிந்தபோது, ஊனமுற்ற தனது தந்தையை யும் கவனித்துக்கொண்டிருந்தார். மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்கும் பல போராட்டங்களில் கலந்துகொண்ட அவர் பேச்சுவார்த்தைக் கழகம்' (டயலாக் இன்ஸ்டிட்யூட்) என்ற நிறுவனத்தின் தலைவராக இருந்தார்.

அவர் தூக்கிலிடப்படுவதுபற்றி அவரது குடும்பத்துக்கு எந்தத் தகவலும் கிடையாது. அது நடந்து சில நாள்களுக்குப் பின்புதான் அவரது மனைவிக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் எங்கு புதைக்கப்பட்டிருக்கிறார் என்பது இன்றுவரை அவருடைய குடும்பத்துக்குத் தெரியாது.



### கவிதை இறைவனுக்கு எதிரானதா?

ஷபானிக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டதற்குக் காரணம், அவர் இறைவனுக்கு எதிராகப் போர் தொடுத்ததே என்று சொல்லப் படுகிறது. கவிதை இறைவனுக்கு எதிரானது என்று பல ஆட்சியாளர்கள் நினைக்கலாம். ஆனால், கவிதை எழுதியதற்காகக் கவிஞனைக் கொல்வது ஈரானில்தான் நடக்கும் என்று தோன்றுகிறது. மேற்கத்தியத் தலைவர்கள் இதைப் பற்றி அதிகம் பேச மாட்டார்கள். ஏனென்றால், இன்றைய ஈரானிய அரசு நாங்கள் அணு ஆயுதங்களைத் தயாரிக்க மாட்டோம் என்று அறிவித்துவிட்டது. ஈரானிய அரசின் நட்பு அவர்களுக்குத் தேவை.

ஷபானிக்குத் தான் உயிரோடு திரும்ப வர மாட்டோம் என்பது தெரிந்தி ருக்கிறது. அவரது கவிதை இது:

**நான் இறக்க வேண்டும் என்பதற்கு**
**ஏழு காரணங்கள்:**
**ஏழு நாட்கள் அவர்கள்**
**ஓங்கிய குரலில் சொன்னார்கள்**

**நீ இறைவனுக்கு**
**எதிராகப் போர்**
**தொடுத்திருக்கிறாய் என்று**

**சனிக் கிழமை - நீ ஓர் அரேபியன்**

**ஞாயிற்றுக்கிழமை - நீ ஓர் அஹ்வாசியன்**

**திங்கள்கிழமை - நீ ஓர் ஈரானியன்**
**என்பதை நினைவில் வைத்துக்கொள்**

**செவ்வாய்க்கிழமை -**
**நீ புனிதப் புரட்சியை**
**கேலிசெய்கிறாய்**

**புதன்கிழமை -**
**நீ மற்றவர்களுக்கு**
**துணையாகக் குரல்கொடுக்கவில்லையா?**

**வியாழக்கிழமை -**
**நீ ஒரு கவிஞன், பாடகன்**

**வெள்ளிக்கிழமை - நீ ஒரு மனிதன்**
**இது போதாதா இறப்பதற்கு?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காதல் நகரம்"

## முதலிடம் வியன்னா



உலகில் உள்ள 223 நகரங்களில் காதல்மற்றும் பிரகாசமான நகரம்" என்ற பட்டியலில் ஒஸ்திரியாவின் தலைநகர் வியன்னா, சுவிசின் சூரிச் மற்றும் நியூசிலாந்தின் ஆக்லாந்து முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளது.

தொடர்ந்து ஜேர்மனியின் மூனிச் 4ஆம் இடத்தையும், கனடாவின் வான் கூவர் 5ஆம் இடத்தையும், பாரிஸ் 27ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. ஐரோப்பாவில் மிகத் தரம் குறைந்த நகரமாக ஜோர்ஜியாவின் திபிசிலி நகரம் இருக்கின்றது. லண்டன் 38ஆவது இடத்தையும், ஸ்பெயினின் மாட்ரிட் 50 ஆவது இடத்தையும் மற்றும் இத்தாலியின் தலைநகர் ரோம் 51 ஆவது இடத்தையும் பிடித்திருப்பதால் இவை அனைத்தும் பிரான்ஸைக் காட்டிலும் பின்னணியில் இருப்பதாக பிரான்ஸ் மக்கள் பெருமையுடன் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் "காதல் நகரம்" "விளக்குகளால் மிளிரும் நகரம்" என பல்வேறு பெயர்களில் போற்றப்பட்டாலும், வாழ்க்கை தரம் என்பதில் முன்னிலை வகிப்பதில்லை என சமீபத்தில் வெளியான உலக தரவரிசை பட்டியலின் மூலம் தெரியவந்துள்ளது.



7 அடிகள் 4 அங்குல உயரமான வோங் ஜியாங் என்பவர் தனது காதலியாக 5 அடிகள் 1 அங்குல உயரமுடைய ஷியோ கொங் என்பவரை தேர்ந்தெடுத்துள்ளார். நீண்ட காலமாக தனியாக இருந்த அவர் தனக்கான ஒரு காதலியை தேர்ந்தெடுப்பதற்காக ஊடகங்களில் விளம்பரம் செய்திருந்தார். ஜியாங் தான் வேலை செய்யும் பூங்காவில் தனது காதலியுடன்...

## விமான இயந்திரங்களில் லொறி




கனடாவின் ஒண்டாரியோ நகரில் நவீன வாகனங்களுக்கான கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் பங்கேற்ற அதிநவீன லொறி பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்துள்ளது.

இந்த லொறியின் உரிமையாளரான நியெல் டார்னெல் என்பவர் 1957 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'செவெர்லெட்' லொறியின் வடிவமைப்பை மாற்றி, அதில் அமெரிக்க விமானப்படைக்கு சொந்தமான 3 பழைய ஜெட் விமான என்ஜின்களை பொருத்தி, ஒரு மணி நேரத்தில் 643 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும் அசுர வாகனமாக மாற்றியுள்ளார்.


இன்றைய சாலைகளில் ஓடும் கனரக லொறி இயந்திரங்களின் அதிகபட்ச குதிரை இழுவைத் திறன் (ஹோர்ஸ் பவர்) 400 ஹெச்.பி.க்கும் குறைவாகவே உள்ள நிலையில், நியெல் டார்னெல் உருவாக்கியுள்ள இந்த அதிநவீன லொறியின் இழுவைத் திறன் 36 ஆயிரம் ஹெச்.பி. என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திறனுடன் ஆறரை செக்கனில் கால் மைல் தூரத்தை கடந்து 'ஷாக்வேவ்' என பெயரிடப்பட்டுள்ள இந்த லொறி புதிய சாதனையை படைத்துள்ளது.

உலகிலேயே அதிக அறைகளைக் கொண்டது என்ற உலகசாதனைக்கு சொந்தமாக மாறியுள்ளது தென் சீனாவின் சன்யா எனும் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹொட்டல் ஒன்று. சுமார் 6,668 அறைகளைக் கொண்டுள்ள இந்த ஹோட்டலானது பழங்களைக் கொண்ட மரங்களின் வடிவமைப்பினை ஒத்ததாக காணப்படுகின்றது.

7 நட்சத்திரக் ஹொட்டலான இதில் சொப்பிங் பிளாஸா, மதுபானசாலைகள், திரையரங்கு என்பனவும் காணப்படுகின்றன.





கனடாவை சேர்ந்த நபர் ஒருவர், பனியில் அழகான டைனோசர் ஒன்றை உருவாக்கியுள்ளார். அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. சுமார் 10 மணிநேரம் செலவழித்து பனியை குவித்த பின், மீண்டும் 10 மணிநேரம் செலவழித்து மிக கவனமாக டைனோசரை உருவாக்கியுள்ளார்.



பல்சர் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வகை 400CS மோட்டார் சைக்கிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 பெப்ரவரி 26 ஆம் திகதி வெளியி